தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௦௦௯	மலர்
	பிங்கள. தை, மாசி,	
௫௧	1978 மார்ச்சு, ஏப்ரல்,	௧௦, ௧௧,

அளபெடை – ஒரு குறிப்பு

பேராசிரியர் **கோ. வேங்கடாசலம்** எம். ஏ.,

ஈ. வே. ரா. கல்லூரி.

ஒரு மரபு; இன்னிசை, இசைநிறை. சொல்லிசை எனும் இவற்றுக்குத் தரப்படும் விளக்கங்கள் நாமெல்லாம் அறிந்தனவே, எனினு ம் இவற்றுள் ஒரு சிலவற்றுக்கு வேறு ஒருவகை விளக்கம் தரினும் பொருந்துவதாகத் தோன்றுகிறது.

ஒருசில எடுத்துக் காட்டுகளைப் பார்க்கலாம்

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு ''

என்னும் குறளில் வரும் அளபெடை இன்னிசை யளபெடை என்று கொள்ளப்படுகிறது. ஆனல் கூர்ந்து பொருளை ஆராய்ந்து பார்த்தால், தன்வினைச்சொல், பிறவினைச் சொல்லாகப் பொருள் படுமாறு அளபெடைப் புணர்ப்பினல் ஏற்படுகிறது என்பதை உணரலாம். அளபெடையை நீக்கினல்

'' துன்புறும் துவ்வாமை இல்லாகும் '' என்று திருக்குறள் அடி அமையும். இதன் பொருள் வெளிப்படை; ஆனல் அளபெடையைப் புணர்த்திய துன்புறூஉம் துவ்வாமை என்பதற்குத் துன்பத்தை உறுவிக்கின்ற துவ்வாமை எனப் பொருளமைதல் காண்க. பரிமேலழகரும் இவ்வாறே உரைத்தார்.

ஆக, அளபெடை இந்த இடத்தில் இன்னிசை யளபெடையாக நில்லாமல், தன்வினையைப் பிறவினையாகப் பொருளாக்கம் செய்தற்கு வந்ததாகக் கொள்ளப்படுதல் சிறப்பாகும் எனக் கருதுகிறேன்.

அடுத்து வேறு சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாஞ்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல் ''

அளைஇ — இதனைச்சொல் லிசையளபெடை என்கிறோம். **அளை** என்பது **அளைஇ** என அளபெடுத்து அதன் பயனாக **அளை** என்னும் பெயர் வினையாக மாற்றம் பெற்றுப் பொருள் படுகிறது என்பதாக விளக்கம் தரப்படுகிறது. இதனை ஆராய்வோம்:- இங்கு அளபெடை உள்ளதா? '**அளைஇ**' என்ற சொல்லில் உள்ள ''**இ**'' அளபெடைக் குறியா? இதனை இவ்வாறு கொள்ளாமல் வேறு வகையாகவும் கருத இடமுண்டா? கூர்ந்து நோக்கினால், வேறுவகையாகவும் விளக்க இடமுண்டு என்று கருதுகிறேன்.

'**இ**' என்பது இறந்தகால இடைநிலை என்பது நாம் அறிந்த ஒன்று. ஓடி, நாடி, கூடி என்னும் சொற்களில் உள்ளது போல், அளைஇ என்னும் சொல்லில் '**இ**' என்பதை இறந்தகால இடைநிலையாகக் கொள்ளவேண்டும். '**இ**' என்ற எழுத்து, உடம்படு மெய் பெறாது நிற்பதால் **அளைஇ** என்ற சொல்லின் வடிவம் புதுமையாக நமக்குத் தோன்றுகிறது.

ஆக, இவ்வழி நோக்கினால், அளைஇ என்பது ஓடி, கூடி என்ற சொற்கள் போல, இறந்தகால வினையெச்சச் சொல்லேயன்றி, அளபெடுத்த சொல் அன்று என்பது புலப்படும்.

இனி வேறுசில சொற்களைப் பார்ப்போம்.

ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே

இச் சொற்களும் சொல்லிசை யளபெடை யேற்ற சொற்கள் எனவே கருதப்படுகின்றன. இவற்றில் அளபெடை உண்டு; ஆனால் சொல்லிசை யளபடை அன்று, இசைநிறை யளபெடை எனக் கொள்ளல் தகும். இதனை ஆராய்ந்து பார்ப்போம்.

ஒரீஇ — ஒருவி — ஒரு + இ
வ் — உடம்படு மெய்
ஒரு + இ — ஒரி [உடம்படு மெய்யில்லாமல்]
இறந்த கால இடைநிலை.

ஒருவி என்பதும் **ஒரி** என்பதும் ஒன்றே. ஒன்று உடம்படு மெய்யோடு கூடியுள்ளது; மற்றது உடம்படு மெய்யின்றி உள்ளது. ஒரி என்பது ஒருவி என்பது போன்ற ஒருவகை வினையெச்ச வடிவம். இது ஓரசைச் சொல்லாக இருப்பதால், யாப்பில் அளபெடுத்து ஒரீஇ

என நிற்கிறது. இந்த நிலையில் இது இசைநிறையளபெடை என்றே கொள்ளப்படல் வெண்டும்.

இக்குறிப்பில் தன்வினைச்சொல்லைப் பிறவினைச் சொல்லாக மாற்றுதற்கு உதவும் - வகையிலும் அளபெடை வருகிறது என்பதும் சொல்லிசை யளபெடை என்று மரபாகக் கருதப்படும் வகையில் ஓர் அளபெடை இல்லை அது உண்மையில் இசைநிறை யளபெடையே [அல்லது இன்னிசை யளபெடை — இடம் நோக்கி] என்பதும் சொல்லப்பட்டன.

பாரதிதாசனும் - ஷெல்லியும்
ஓர் ஒப்பாய்வு

இராசா முகம்மது பி. ஏ.,

இன்றைய நாகரிக உலகில் மக்களின் வாழ்வை வளமிக்கதாயும் வசதிமிக்கதாயும் செய்திருக்கும் அறிவியல், இலக்கியத்திலும் தன் முத்திரையைப் பதிக்கத் தவறவில்லை. மனித இனப் பண்பொற்றுமையை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் முறையில் உலக இலக்கியங்களுக்கு இடையில் காணப்படும் பொதுத் தன்மையை ஆய்வதே இன்று விரைவாக வளர்ந்துவரும் ஒப்பிலக்கியத் துறையாகும். ''காரணமின்றி எதுவும் நிகழ்வதில்லை.'' சூழ்நிலைகள் மாறாதிருக்குமானால் ஒரே தன்மையான காரணங்கள் ஒரே மாதிரியான பயனையே அளிக்கும் என்ற இரு அறிவியல் கோட்பாடுகளுக்கும் விளக்கமாக ஒப்பிலக்கியம் அமைகிறது.

''தான் வாழும் சமுதாயத்தை நேசிக்கிறவன் அச்சமுதாயத்திற்குப் பிறமொழியினர் சொன்ன, சிந்தித்த, உயர்ந்த கருத்துக்களை வழங்குவதுடன், தன் சமுதாயத்தினர் சொன்ன உயர்ந்த கருத்துக்களை மனித இனத்திற்கே பொதுவான [இலக்கியக்] கருவூலத்தில் சேர்ப்பது கடமை என' அறிஞர் ஜெரார்டு கருதுகிறார். அந்தக் கடமை உணர்வின் அடிப்படையிலேயே ஒப்பிலக்கியம் வளர்கிறது.

காரணமின்றி எதுவும் நிகழ்வதில்லை என்பதை உறுதிப் படுத்துவதைப் போல, பாரதிதாசனும் ஷெல்லியும் வாழ்ந்த சமுதாயம் அவர்கள் புரட்சியாளர்களாக மாறிச் சீர்திருத்தம் செய்யவேண்டிய அளவுக்கு வெகுவாகக் கெட்டுக்கிடந்தது. அப்போது அதனைச் சீர்திருத்த வேண்டுமென்ற முனைப்பான விழிப்புணர்ச்சி அறிஞர் பெருமக்களிடம் ஏற்பட்டிருந்தது. இந்தச்சமுதாய நிலையே காலத்தின்

தேவையான இப்புரட்சியாளர்களை ஈன்றெடுத்தது. இவர்கள் நாடு' மொழி' இனம், காலம், பண்பாடு முதலியவற்றால் வேறுபட்டவர்கள் எனினும், வேறு பல நிலைகளில் ஒப்புமை உடையவர்கள்.

பாரதிதாசனும் ஷெல்லியும் புரட்சியாளர்கள். அரசியல், சமுதாய, சமய கோட்பாடுகளில் சர்வாதிகாரத்தை எதிர்த்தனர். இருவரும் உலகு தழுவிய மனிதாபிமானிகள். ஒரு புதிய உலகை உருவாக்கத் துடித்த சீர்திருத்த வாதிகள். இயற்கையில் தாம் கலந்து பாடியவர்கள்; சுதந்திர உணர்ச்சி மிக்கவர்கள்; வீறும் விவேகமும் கொண்டதன்னுணர்ச்சிப்பாக்களை இயற்றியவர்கள்; தங்கள் படைப்புக்களைத் தங்கள் எண்ணங்கள், குறிக்கோள்கள், விருப்பு வெறுப்புகள் முதலியவற்றை வெளியிடும் வாயிலாகக் கொண்டார்கள்; பகுத்தறி வாளர்கள்.

1891-ஆம் ஆண்டில் புதுச்சேரியில் பிறந்தவர் பாரதிதாசன். அப்போது வடவர்களின் மத ஆதிக்கம், அரசியல் செல்வாக்கு இவற்றால் பிற இனத்தவர் அடிமைப் படுத்தப்பட்டிருந்தனர். இந்த சூழ்நிலையைக் களையத் திராவிடர் கழகத்தின் தாய்க் கழகமான தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் 1916-ஆம் ஆண்டு தோன்றியது. அதுவே பின்னர்ச் சுயமரியாதை இயக்கமாகவும், திராவிடர் கழகமாகவும் உருவெடுத்தது. அந்த இயக்கத்தில் ஈடுபாடு கொண்டமையும் பிரெஞ்சி ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரியில் வாழ்ந்தமையும் பிரெஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கொள்கைகள் உள்ளத்துள் ஊடுருவி உணர்வில் கலந்தமையும், இவர் புரட்சியாளராகவும், சமுதாய சீர்திருத்த வாதியாகவும் மாறக் காரணமாக அமைந்தன எனலாம்.

பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட மூன்றாண்டுகளுக்குப் பிறகு ஷெல்லி 1792-ஆம் ஆண்டில் பீல்டு பிளேசில் [Field place] பிறந்தார். புரட்சியின் தந்தையான ரூஸோ தனது சமுதாய ஒப்பந்தம் [The Social contract] என்ற நூலில், கொடுங்கோன்மை, அநீதி ஆகியவற்றிற் கெதிராகத் தன் உரத்த குரலை எழுப்பியிருந்தார். ஏழைகளும், தாழ்த்தப் பட்டவர்களும் ஒருங்கிணைந்து சிலருக்குமட்டுமே பயன்படும் அரசியலமைப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்று புரட்சித் தீமூட்டியிருந்தார் தனது தனிமனித வாதத்தில் [Individualism] பழக்க வழக்கங்களுக்கு அடிமையான சமுதாய வாழ்வைப் புறக்கணித்து மனிதன் தன் எண்ணங்களையும், விருப்பு வெறுப்புகளையும், கற்பனைகளையும், அனுபவங்களையும் சுதந்திரமாக வெளியிடவேண்டும் என விவரித்திருந்தார். தாமஸ் பெயின் தமது மனித உரிமைகள் [Right of Man] பகுத்தறிவுக்காலம் [The age of-

Reason] என்ற இரு நூல்களிலும் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடைத் தரகர்களாய் மதவாதிகள் செயல்படுவதைக் கண்டிப்பது உட்பட பல்வேறு மக்களரசுக் கொள்கைகளைப் போதித்திருந்தார்.

ஷெல்லியின் மாமனார் வில்லியம் காட்வின் தமது 'அரசியல் நீதி விசாரணை' [An Enquiry Concerning Political Justice] என்ற நூலில் பகுத்தறிவின் வாயிலாகச் சீர்திருத்தமும், சமத்துவமும், சமநீதியும், கிருதயுகம் [Millennium] அமைப்பதும் சாத்தியம் என்று கூறியிருந்தார். இச்சீர்திருத்தக் கருத்துக்களெல்லாம் ஷெல்லியின் உணர்வோடும் உயிரோடும் கலந்து அவரை ஒரு புரட்சியாளராகவும் சீர்திருத்த வாதியாகவும் மாற்றின.

'உலகில் நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டத்தில் உண்மையே வெல்லுகிறது ஏனெனில் தீமை என்பது அடிப்படையானதல்ல. இடையில் வந்ததே. எனவே, அது வீழ்த்தப்பட வேண்டிய - வெளியேற்றப்பட வேண்டிய ஒன்று' என்பது ஷெல்லியின் குறிக்கோள். அதுபோலவே தமிழ்ச் சமுதாயத்தில் வடவர்களின் மத ஆதிக்கமும் அரசியல் செல்வாக்கும் இடைக் காலத்தில் எற்பட்டுத் தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிக்க முயன்றன. எனவே அவை பகுத்தறிவால் களையப்பட வேண்டியவை என்பது பாரதிதாசனின் கருத்து.

சுய நலமிகளாலும், மதவாதிகளாலும் உலகம் நிலைகுலைந்து கிடப்பதாயும் பகுத்தறிவால் அது மீண்டும் சீர்படும் எனவும் பாரதிதாசன் கருதுகிறார்.

இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே

பாண்டியன் பரிசு.

சர்வாதிகாரிகள் மதத் தலைவர்கள் அரசியலறிஞர்கள் முதலியோர் மலர்ந்து மணம் வீசவேண்டிய மனித மொக்குகளில் விஷம் பாய்ச்சி சமுதாயத்தைக் கெடுத்து விடுகின்றனர் என்கிறார் ஷெல்லி.

"Kings, priests and statesmen blast the human flower
Even in its tender bud their influence darts
Like subtle poison through the blood veins
Of desolate society.

Queen Mab

ஆதிக்கக் காரர்களின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் தமிழர்களின் காவலனுகக் கவிஞர் மாறி அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வழி காட்டுகிருர்.

"கலேயே வளர் தொழில் மேவிடு
கவிதை புனே தமிழா!
கடலே நிகர் படைசேர் கடு
விடநேர் கருவி கள்சேர்
நிலமே உழு! நவதானிய
நிறை யூதியம் அடைவாய்
....
கொலே வாளினே எடடா! மிகு
கொடியோர் செயல் அறவே"

— பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1

இதே கருத்துப்பட கவிஞர் ஷெல்லியும் ஆங்கில மக்களின் நலம் காப்பவராகி அவர்கள் தங்களது விளைச்சலே, நெசவை செல்வத்தைப் போர்க்கருவிகளே ஆக்கிரமிப்பாளர்கள் அணுக அனுமதிக்கக் கூடாது என்கிருர்.

Men of England...........
Sow seeds - but let no tyrant reap ;
Find wealth - let no imposter heap.
Weave robes - let no idle wear.
Forge arms - in your defence to bear."

பாரதிதாசன் அடிப்படையில் சமுதாய சீர்திருத்த வாதி. நடைமுறைக்கு ஒத்துவரும் சமுதாய சீர்த் திருத்தங்களின் மூலம் தலே மா றிக்கிடக்கும் சமுதாய அமைப்பை ஒழுங்கு படுத்த முயன்றவர். தான் வாழ்ந்த சமுதாயத்தில் காலூன்றி நின்று கொண்டு தம் நுண்மாண் நுழை புலத்தால் நோய்நாடி அதன் மூலத்தை நாடி, தக்க மருந்திட்டு நோய்நீக்கிய மருத்துவர். ஆனல், ஷெல்லியோ தன் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களாலும், தாக்குதல்களாலும், ஏமாற்றங்களாலும் மனம் நொந்து போனவர். இவற்றிலிருந்து

விடுபட, கனவுலகிலும் கற்பனை உலகிலும் சஞ்சரித்தவர், எனவே, சுரண்டல், சுயநலம், சர்வாதிகாரம் முதலியவை நிறைந்துள்ள இவ்வுலகத்தை அழித்து அந்த அழிவில் ஒரு புதிய உலகை உருவாக்க முயன்றார்.

பாரதிதாசன் காணவிழைந்த சீர்திருத்த சமுதாயத்தில் சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவுகின்றன. கல்வி பொதுநலம், நல்லெண்ணம் மிகுந்துள்ளன.

எல்லார்க்கும் எல்லாமென் றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்
இல்லாரும் அங்கில்லை பிறன்நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே
நல்லாரே எல்லோரும் அவ்வையத்தில்''

— பாண்டியன் பரிசு

புரட்சிக்கவி, வீரத்தாய், காதலா கடமையா? கடல்மேற் குமிழிகள் முதலில் குறுங்காவியங்களில் முடியாட்சியை ஒழித்துக் குடியாட்சியை அமைத்துக் காட்டுகிறார்.

கடற்குமிழி வீழ்ந்திடுக சாதிவீழ்க !
கடல் மக்களிடை வேந்தர் மறைந்துபோக !
குடியரசு தழைக''

— கடல்மேற் குமிழிகள்.

ஷெல்லி காணவிழைந்த கிருதயுகத்தில் [Millennium] முடியாட்சியை ஒழித்துக் குடியாட்சியைக் காண்கிறார். மக்கள், சுதந்திரம், சமத்துவம் மிக்கவர்களாயும், நேர்மை, பகுத்தறிவு உடைவர்களாயும் வாழ்கின்றனர்.

Sceptreless, free uncircumscribed, but man
Equal. un-lassed tribeless and motionless
Exempt. from ane worship, degree the king
Over himself. just gentle urse''

— Prometheus Unbound.

இருகவிஞர்களும் இயற்கையைத் தங்கள் கருத்துக்களை வெளியிடும் ஊடகமாகவும். படிப்பினைத் தந்து மனிதாபிமானத்தை வளர்க்கும் ஆசிரியனாகவும் கொண்டனர். இயற்கையை ஷெல்லி நுண்பொருளாகக் [abstract] கண்டார் பாரதிதாசன் பருப்பொருளாகக் [concrete] கண்டார்.

இயற்கையைக் கவிஞர் பாரதிதாசன் எங்கும் அளாவியுள்ள ஒரு தாயாகவும், [அன்பின் திருவுருவமாகவும] எல்லையற்ற சக்தி கொண்டவளாகவும் அண்டங்களின் ஒவ்வோரு அசைவினையும் நிர்ணயிப்பவளாகவும் கண்டார்.

எங்கெங்கு காணினும் சக்தியா — தம்பீ
ஏழுகடல் அவள் வண்ணமடா — அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் —அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா.

— ப்ாரதிதாசனின் முதற்பாடல்

பாரதிதாசன் இயற்கையை அன்னையாய் அன்பின் திருவுருவமாய்க் கண்டார் என்பதை அவர் தென்றலின் தன்மையை அன்னையின் அன்பினுக்கு உவமித்துக் கூறியது புலப்படுத்தும்.

.... பெற்ற
அன்னையைக் கண்டோர், அன்னை
அன்பினைக் கண்ணிற் காணார்
என்னினும் உயிர்க்கூட் டத்தை
இணைத்திடல் அன்பே யன்றோ''

— தென்றல் [அழகின் சிரிப்பு

ஷெல்லி இயற்கையை எங்கும் பரவியுள்ள அன்பெனும் ஆவியாகவும் [Spirit of Love]. அவ்வன்பே உலகின் இயக்கு விசையாகவும், அண்டங்களின் ஆவியாகவும் [Universal spirit]. யாவற்றையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல சக்தியாகவும் காண்கிறார்.

"Which [i. e. the Universal Spirit] wields the world
with never wearied love
Sustains it from beneath and kindles it above.

— Adonais

"Wild spirit! which art moving everywhere;
Destroyer and preserver."

— Ode to the west wind

பாரதிதாசனுக்கு இயற்கையையும் விஞ்சிய தொரு தமிழ்ப் பற்றிருந்தது. எனவே இயற்கையை பின்புலமாகக்கொண்டு தமிழ்ப் பற்றை உணர்த்தினர். ஷெல்லிக்கு இயற்கையுடன் கலந்துவிட வேண்டுமென்ற துடிப்பிருந்தது.

.... கன்னற்
பொருள் தரும் தமிழே நீ ஓர்
பூக்காடு நானோர் தம்பி ''
— அழகின் சிரிப்பு

என்று பாடுவதன் மூலம் தமிழ் என்ற பூக்காட்டில் தேன்மாந்தும் வண்டாகத் தன்னை உறுமாற்றிக் கொண்டார் பாரதிதாசன்.

ஷெல்லியோ அலை, இலை, முகில் ஆகிய ஏதேனும் ஒன்ருகிக் காற்றில் கலந்துவிட விழைகிருர்.

"If l were a dead leaf thou mightest bear,
If I were a suift cloud to fly with thee
A wave to pont beneath they power and share
The impulse of they strength. "
— Ode to the west wind.

காதல் கொள்ளுதல் உயிரின் இயற்கை உடலின்தேவை என்றுணர்ந்த கவிஞர் விதவைக்கு மறுமண உரிமை அளிக்கப்பட வேண்டும் என் வாதாடினர்.

'' வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ ?
பாமத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ ?
— காதலைத் தீய்த்த கட்டுப்பாடு.

காதல் கொள்ளுதல் உயிரின் இயற்கை உடலின் தேவை என்பதை இயற்கையை சான்று காட்டி நிறுவினர் ஷெல்லி.

'' Nothing in the world is single
All things by a law divine
In one spirit meet and mingle ''
— Love's philosaqhy.

இயற்கைக் கூறுகளிலுள்ள இணை நிலையைத் தலைவன் ஒருவன் தன் காதல் தலைவிக்குக் காட்டி அவளை இணங்கச் செய்வதாக கவிஞர் காட்டுகிருர்.

'' மலர்களை வண்டுகள் தழுவின
தழுவின பறவை இரண்டு
கதிரவன் ஒளியோடு வான் கொஞ்சுகிறது
கடைவிழி திறந்துபார் வஞ்சியிள மானே
— சோலைக்காட்சி [இசையமுது]

இதே போன்ற தொரு காட்சியை ஷெல்லியும் சித்தரித்துள்ளார்

" See the mountains kiss high hэaven
And the waves clasp one another
And the sunlight clasps the earth
And the moon beams kiss the sea
What is all this sweet work worth
If thou kiss not me. "

— Loves philosophy

இரு கவிஞர்களும் குறியீடு [Symbol] கையாள்வதிலும் ஒப்புமை உடையவர்களாக இருக்கின்றனர். பாரதிதாசன் பருப்பொருளை [concrete] குறியீடாகக் கையாள்கிறார். ஷெல்லியோ நுண் பொருளை [abstract] குறியீடாகக் கையாள்கிறார்.

பாரதிதாசன் 'விளக்கை' வாழ்க்கைத் துணைவியாகவும், வாழ்வின் ஒளியாகவும், அறிவுடைமையாகவும் காண்கிறார் 'இருளை' அறியாமையாகவும், மூட நம்பிக்கையாகவும் காண்கிறார். இதனை அவரது இருண்ட வீடு குடும்ப விளக்கு ஆகிய காவியத் தலைப்புகளே நிறுவும்.

ஷெல்லி இருளை [Darkness] சந்தேகம் அச்சம் மனப்போராட்டம் ஆகிய அறியாமையின் கூறுகளாய்க் கண்டார். 'அன்பை' [Love] வாழ்வின் ஒளியாகவும், உண்மை அழகுபோன்ற அறிவுடைமையின் தோற்றங்களாகவும் கண்டார். இதனை அவரது கவிதை நாடகமான ' பிரிமிதீபனின் விடுதலை ' [Prometheus Unband] உறுதிப்படுத்தும்.

இரு புரட்சிக் கவிஞர்களும் புராண இதிகாசக் கதைகளைத்தங்கள் கொள்கைக்கேற்ப மாற்றியமைத்துக் கொண்டவர்கள்.

கம்ப ராமாயணம் இரணியனை ஆணவமும் அறியாமையும் மிக்க வனாகக் காட்டுகிறது ஆனல் பாரதிதாசனே அவனை இரணியன் இணையற்ற வீரன் 'எனத்தன் கவிதை நாடகத்தில் சித்தரித்துள்ளார் ஆரியக் கடவுளுக்குத் தலை வணங்காத சுயமரியாதைக் காரன், இரணியன் - இணையற்ற வீரன் என்பது அவர் துணிபு.

ஷெல்லி 'அன்பின் ஆற்றல் சர்வாதிகாரக் கொடுங்கோன்மையை வீழ்த்த வல்லதென்ற தனது நம்பிக்கையைக் கிரேக்க புராணக் கதையை மாற்றியமைத்து நிலை நாட்டுகிறார். கிரேக்க புராணத்தில் பிரிமீதயஸ் என்ற தேவன் மனிதர்கள் மீது அன்பு கொண்டு துறக்க உலகிலிருந்து நெருப்பைத் திருடி, மக்களுக்கு

அதனைப் பயன்படுத்தக் கற்றுக்கொடுத்தான். இச்செயலால் பிரமீதீயஸ் மீது சினங்கொண்ட கிரேக்க தெய்வம் ஜூபிடர் அவனைச் சித்திர வதை செய்தது. இக்கதையை பிரமிதீயஸ் மனிதாபிமானியாக இருந்தமையால், அன்புத்தெய்வமான ஆசியாவால் விடுதலை செய்யப்படுவதாகக் கற்பனைசெய்து பிரமிதீயஸின் விடுதலை [Prometheus Unbound] என்ற கவிதை நாடகம் புனைந்துள்ளார் ஷெல்லி.

இரு கவிஞர்களும் வாழ்ந்த காலத்திலிருந்த அரசியல், மதம் முதலிய வற்றின் ஆதிக்கம் போன்ற சூழ்நிலைகளாலும், சமுதாயத்திலிருந்த சுய நலம், சமத்துவமின்மை, மனிதாபிமானமின்மை போன்ற காரணங்களாலும் சமுதாய அமைப்புச் சீர்கெட்டுக் கிடந்தது. அதனைச் சீர்செய்து புத்துலகம் காண்பது என்ற ஒரே குறிக்கோளில்தான் அவர்கள் பாடினர்கள் அவர்களிடமிருந்த இந்தக் குறிக்கோளொப்புமையே நாம் அவர்களிடம் கண்ட கருத்தொப்புமைகளுக்கெல்லாம் அடிப்படையாகும் இது சூழ்நிலைகள் மாறுதிருக்குமானல் ஒரே தன்மையான காரணங்கள் ஒரே மாதிரியான பயனையே அளிக்கும் என்பதையே உறுதிப்படுத்துகிறது.

கம்பம் பகுதி மங்கலதேவி கோயில் கண்ணகி கோயிலே!

தமிழக அரசின் தொல்பொருள் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மதுரை மாவட்டக் கம்பம் பள்ளத்தாக்கில் சுருளி மலைத் தொடரின் தாழ்வரையில் உள்ள மங்கலதேவி கோயில் கண்ணகி கோயில் அல்ல என்று அண்மையில் அறிக்கை விடுத்துள்ளார்.

ஈரோடு வரலாற்றுச் சங்கத்தின் சார்பில், கல்வெட்டாய்வாளர் 'கொங்கு' திங்களிதழ் ஆசிரியர் புலவர் செ. இராசு (சி. எஸ், ஐ. உயர்பள்ளி, ஈரோடு) அப்பகுதிக்குச் சென்று மூன்று நாட்கள் ஆய்வு நடத்தினர். கூடலூர் கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுத் தலைவர் கூடல் தா. இராமசாமி, செயலாளர் புலவர் இரா. தமிழாதன், பொருளாளர் சா அப்துல் அக்கீம் பிற குழு உறுப்பினர்கள் ஆகியோர் தக்க பல ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஆய்விலிருந்து அங்குள்ள மங்கலதேவி கோயில் கண்ணகி கோயிலே என்ற முடிவுக்கு வரப் பல சான்றுகள் இருப்பதாகப் புலவர் செ. இராசு கருதுகின்றார்.

கம்பம் பகுதி மங்கலதேவி கோயில் கண்ணகி கோயிலே!

தொல்பொருள் துறை 'அதிகாரி ஒருவர்' கீழ்க்கண்ட கருத்துக்களைக் கூறியுள்ளார்.

(1) செங்குட்டுவன் கட்டிய கோயில் வஞ்சி நகரில் இருந்தது.

(2) அக்கோயில் மலை உச்சியில் இல்லை.

(3) மலையில் உள்ள மங்கலதேவி கோயில் கண்ணகி கோயில் அல்ல.

(4) கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கு முன்னர் அம்மாதிரி கருங் கற்பணி இல்லை.

(5) மங்கலதேவி ஆலயத்தைக் கண்ணகி கோயில் என்று கூறுவது ''கட்டுக் கதையிலிருந்து வரலாற்றைச் சிருஷ்டிக்கும் முயற்சி''.

(6) தொல்பொருள் விஞ்ஞான முறைப்படி அல்லது வரலாற்றின்படி அக்கோயில் கண்ணகி ஆலயம் என முடிவு செய்ய ஒரு சான்றும் கிடைத்தது இல்லை.

(7) 1904 முதலே தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினருக்கு மங்கலதேவி கோயில் பற்றித் தெரியும். இவ்வேழு கருத்துக்களின் தன்மையை வரிசையாக ஆராயலாம்

(1) செங்குட்டுவன் கட்டிய கோயில் வஞ்சி மாநகரில் இல்லை.

வடநாடு சென்று வந்த செங்குட்டுவன்

> '... ... ... நாளிர்சினை வேங்கைப்
> பொன்னணி புதுநிழல் பொருந்திய
> நங்கையை
> அறக்களத்து அந்தணர் ஆசான் பெருங்கணி
> சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று
> மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள்
> பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்'

(சிலம்பு 28 : 220-225) அமைந்ததாகச் சிலம்பு கூறுகின்றது. வஞ்சியிலிருந்து சென்று அமைத்தான் என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

மணிமேகலை, இரண்டாவது முறையாக மணி பல்லவத் தீவு சென்றவள் அங்கிருந்து 'வஞ்சியுட் செல்வன் என்று அந்தரத்து எழுந்து' செல்லுகின்றாள்.

(மணி 25 : 238, 239) வழியில்

'தணியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடை கெழுதாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து'

வணங்கிய பின்னரும் பயணம் செய்து வஞ்சிமா நகரின் புறஞ் சேரியை அடைகின்ருள்.

(மணி : 26) மணி பல்லவத்திலிருந்து வான் வழியாக வஞ்சி செல்லும் நேர் கோட்டுப் பாதையிலேயே மங்கலதேவி கோயில் உள்ளது.

(2) செங்குட்டுவன் கட்டிய கோயில் மலையில் தான் இருந்தது.

சாலினி தெய்வமேறிக் கூறிய பொழுது '**குடமலையாட்டி**' என்று கூறுகின்ருள். மேற்கு மலையில் தெய்வமாக விற்றிருந்து ஆள்பவள் என்பதே இதன் கருத்தாகும். 'மேற்ருெட்டு தெய்வ மாகப் போகும் இடம் கூறினுள்' என்பதே உரைகாரர் தரும் உரையாகும்.

கண்ணகி மதுரையில் மேற்கு வாயிலில் வெளியேறி வைகைக் கரையில் நடந்து வந்து '**நெடுவேள் குன்றில்**' அடி வைத்து ஏறி '**மலை வேங்கை நறுநிழலில்** வந்து வள்ளிபோல்' நிற்கின்ருள். அவ்விடம் '**பறம்பின் தாழ்வரை**' யாகும். அந்த அருகில் நெடியோன் மார்பின் ஆரம் போன்று **பெருமலை விலங்கிய பேரியாறு** உள்ளது. 'இந்திர வில்லின் எழில் கொண்டு இழும் என்று வந்தீய்ந்த இழியும் **மலையருவி**' இருக் கிறது. அங்குதான் செங்குட்டுவன் துணைவியோடு '**மஞ்சு சூழ் சோலை மலை** காண்குவம்' என்று வருகின்ருன். குன்றக் குறவர் கள் மலைபடு பொருட்களைக் காணிக்கையாகக் கொடுக்கின்றனர். தாங்கள் கண்ட அற்புதத்தினைக் கூறுகின்றனர் அம் மலையிலேயே செங்குட்டுவன் கோயில் கட்டினுன்.

'மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட்டு உயர்வரைச் சேணுயர்
சிலம்பில்

(சிலம்பு 30 : 53, 54) என்ற வரிகளில் தெளிவாகக் கோயில் மலையில்தான் இருந்தது என்பதை அறிகின்ருேம்.

கண்ணகி படிமம் பிரதிட்டை செய்யப்படும் கடவுள் மங்கல நாளில், கண்ணகியின் புகார்த் தோழிகள் காவற்பெண்டு, அடித் தோழி, தேவந்தி மூவரும் மதுரை சென்று இடைக்குல மடந்தை மாதரி மகள் ஐயையையும் உடன் அழைத்துக் கொண்டு மலையேறி கண்ணகி கோயிலுக்குச் சென்று அங்கு வீற்றிருந்து விழா எடுத்த செங்குட்டுவனைக் கண்டு தங்கள் சோகக் கதைகளைக் கூறுகின்றனர். சிலம்பு வாயிலாகவே அப்பகுதியைக் காணலாம்.

'காவற்பெண்டும் அடித்தோழியும் கடவுட் சாத்த னுடன்
உறைந்த
தேவந்தியும் உடன் கூடிச் சேயிழையைக்
காண்டுமென்று
மதுரைமா நகர்புகுந்து முதிராமுலைப் பூசல் கேட்டாங்கு
அடைக்கலமிழந்து உயிரிழந்த இடைக்குல மக
ளிடமெய்தி
ஐயையவள் மகளோடும் **வையையொரு
வழிக்கொண்டு
மாமலை மீசையேறிக் கோமகள்தன்
கோயில்புக்கு**
நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவர்க்குத் திறம்
உரைப்பர்மன்'

(சிலம்பு 29 : 1)

அசரீரியாகத் தோன்றி கண்ணகி '**வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்**' என்று கூறினள்.

அரும்பத வுரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் மலையிலே கண்ணகி கோயில் இருந்தது என்பதிலே கருத்து ஒன்றுபட்டுள்ளார். அடியார்க்கு நல்லார் தெளிவாகக் கொடுங்களூர்க்கு அயலதாகிய **செங்குன்றம் என்னும் மலை**

என்று கூறுகின்றார். அரும்பதவுரைகாரர் **திருச்செங்கோடு** என்கிறார்.

(3) மங்கலாதேவிகோயில் கண்ணகி கோயிலே

சுருளி அருவி அருகிலும் மலையிலும் தொன்மையான முருகன் கோயில்கள் உள்ளன. கம்பம் கூடலூர் அருகே உள்ள மலைகட்டும் வைகை ஆற்றுக்கும் தொடர்பு உண்டு. மங்கலாதேவி கோயில்

அருகிலேயே பெரியாறும் (நீர்த் தேக்கமும்) உள்ளது: மதுரையின் மேற்கேதான் உள்ளது. கோயில் உள்ள இடம் மலையின் தாழ் வரையிலேயே உள்ளது. அங்கிருந்து நோக்கின் அருவிகள் பல தோன்றுகின்றன. வேங்கை மரக் கானல்கள் அங்கு மட்டுமே உள்ளன. மங்கலாதேவி கோயிலின் சுனை யானைபோன்ற மலையின் பிடர்த்தலைப் பகுதியில் இரண்டாவது வேங்கைக் கானல் அடியே இருப்பதாகச் சிலம்பு கூறுகின்றது.

(சிலம்பு 30 : 55,56) அம்மலை யானைபோன்று இருப்பதையும், அதன் பிடர்த்தலை போன்ற பகுதியிலேயே கோயில் இருப்பதையும் நேரில் சென்றவர் அறிவர். சுமார் 5000 அடி உயரத்தில் 1800 ஆண்டுகட்கு மேலாகியும் சிலம்பின் வருணனைக் காட்சிகள் அப் படியே மாருமல் இருப்பது நம்மை மெய்மறக்கச் செய்கிறது.

பளிஞர் மண்ணுடிமார், ஊராளிமார் என்ற குன்றக் குறவர்கள் அம்மலைத் தொடரில் வாழ்கின்றனர் கண்ணகி பற்றிய நாடோடிப் பாடலில் கூட 'மலையாளந்து எல்லையிலே மயில் அனையாளர் பேறு பெற்று' என்று தெய்வமான இடம் குறிக்கப்படுகிறது. இன் னும் கேரள மாநிலத்தின் எல்லையருகே தமிழகப் பகுதியில்தான் அக்கோயில் விளங்குவதைப் பார்க்கிறேம். தமிழக ரெவின்யூ போர்டு உறுப்பினரும், மதுரை மாவட்ட கலெக்டரும் சென்று உறுதிப் படுத்தினர்.

சிலப்பதிகாரத்தில் 'மங்கலமடந்தை' என வருமிடத்தில் (சிலம்பு: 20: 53, 88) 'மங்கல மடந்தை மங்கலா தேவி கண்ணகி' என்றே உரையாசிரியர் கூறுகின்ருர்.

கூடலூர் அழகர் கோயில் கல்வெட்டு மலைக் கோயிலை மங்கலா தேவியம்மன்' என்று தெளிவாகக் குறிக்கின்றது ஊர் மக்கள் அக்கோயில் உள்ள மலையை 'மங்கலா தேவி மலை' என்றே இன் றும் கூறுகின்றனர். கம்பம் - கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த தாகவே அம்மலையும், கோயிலும் குறிக்கப்படுகின்றன. இன்று அக்கோயிலில் சிலை எதுவுமில்லை. சிதைந்து இடுப்பின் கீழ்ப் பகுதி மட்டும் உள்ளது.

மலை மீது உள்ள மங்கலா தேவியம்மன் கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள மட்டப்பாறை, மகராசிமலை, பாலைப் பாட்டம், முல்லைப்பாடி, கிள்ளி யேறிப்பற்று என்பவை கூடலூர் அருகே உள்ளன. கேரளாவில் கண்ணகி வழிபாடு 'பகவதி' வழிபாடாக மாறிய பின் மங்கலா தேவியம்மன் மலைக்குச் செல்லும் வழியில்

நடைக்கல் பகவதி கோயில் என்ற கோயில் ஒன்று ஏற்பட்டது. வடநாட்டுச் சிற்ப முறைப்படி செதுக்கப்பட்ட தோரண வாயில் சிதைந்து கிடக்கிறது. இதன் அமைப்பில்தான் பூம்புகாரில் தோரண வாயில் அமைக்கப்பட்டது.

மங்கலா தேவிக்கு பரணி என்ற பெயரும், அம்மலைக்கு ஸ்ரீ பூரணி கிரி என்ற பெயரும் உள்ளனவாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

ஆதிரை, கார்த்திகை என்ற பெண்பாற் பெயர்களை மணிமேகலையிலும் சிலம்பிலும் காணுகின்றோம். இப்பெயர்கள் நான்மீனால் பெயர் பெற்றன. அதுபோல பௌர்ணமி - பரணி - நாள் அன்று கண்ணகி பிறந்திருக்கலாம் என்ற குறிப்பு மனையறப்படுத்த காதையில் வருகிறது. (சிலம்பு 2: 40) பூரணையில் பிறந்தவள் பூரணி என்று பெயர் பெற்றிருக்கலாம். கன்னட நாட்டில் வழங்கும் கதையில் கூட கண்ணகி சந்திரா என்றே அழைக்கப் படுகிறாள்.

கிழக்கு இலங்கையாகிய மட்டக் களப்பில் ஆண்டு முழுவதும் பூட்டப்பட்டுக் கிடக்கும் பல கண்ணகையம்மன் கோயில்கள் பூரணை நாள் அன்று மட்டும் திறக்கப்படுகின்றன.

கவுந்தியடிகள், கோவலன் முதலிய தலைமைப் பாத்திரங்கள் வாயிலாகவே கண்ணகி 'முதுக்குறை நங்கை' (சிலம்பு: 15 : 202) 'சிறுமுதுக்குறைவி' (சிலப்பு 16 :68) என்று அழைக்கப்படுகின்றாள் முதுக்குறைவு பூரண அறிவு, பூரண அறிவுபெற்றவள் பூரணி என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். ஒரு கல்வெட்டில் ஸ்ரீ பூரணி கிரி ஆளுடையநாச்சியார்' என்று பெயர் குறிக்கப் பெறுகின்றது எப்படியும் 'பூரணி' என்ற பெயரும் மங்கலா தேவிக்கு - கண்ணகிக்குப் பொருந்துவதாகவே உள்ளது.

4. கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னர் கருங்கற்பணி உண்டு.

வரலாற்றுக்கு முற்பட்ட பெருங்கல் காலத்திலேயே கற்களைச் செதுக்கி கல் அறைகள் அமைக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் உண்டு. கி. மு 3-ஆம் நூற்றாண்டிலேயே இயற்கைக் குகைகளில் கற்படுக்கைகள் வெட்டப்பட்டன. குன்றைக் குடையும் செய்தி புறநானூற்றில் வந்துள்ளது கல்லால் அமைத்த அணையைக் குறிக்கும் 'கற்சிறை' என்ற தொடரும், கல்லிடித்து இயற்றிய இட்டுவாய்க் கிடங்கு' என்ற தொடரும் மதுரைக் காஞ்சியில் வருகின்றன. சிலப்

பதிகாரமே முழுக் கருங்கல் பணியாகிய இலங்கொளிச் சிலாதலம் என்ற கோயிலைக் குறிக்கின்றது, மணிமேகலை 'நிழல்சால் நெடுங் கல் நின்ற மன்றம்' 'நிறைக் கல் தெற்றி' பற்றிக் குறிக்கின்றது.

பொறியியல் பேரறிஞர் கொடுமுடி க. சண்முகம் அவர்கள் இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாம் கருத்தரங்கு ஆய்வுக் கோவையில் இது குறித்து விளக்கமாக எழுதியுள்ளார். இவற்றின் மூலமாகச் சிலப்பதிகாரக் காலத்திலேயே கருங்கற் பணிகள் தமிழகத்தில் இருந்தன, என்பதைத் தெளிவாக அறிகின்றோம்.

(5) மங்கலா தேவி கண்ணகியே என்பது வரலாறு. கட்டுக் கதை அல்ல.

மலை சூழ்ந்த அப்பகுதியில் அவ்வளவு பரந்த கோயில் எடுப்பதற்கு ஏதேனும் சிறந்த முக்கியத்துவம் இருக்க வேண்டும்.

செங்குட்டுவன் மலைக்கோயிலின் உயர்ந்த வாயில் அருகே இருந்ததாகச் சிலம்பு கூறும். அந்த 'ஓங்கிநிம் கோட்டி'க்கு ஏற்ப இன்னும் உயர்ந்த தூண்கள் மங்கலதேவி கோயில் வாயிலில் நிற்பதைக் காணலாம். செங்குட்டுவனால் எடுக்கப்பட்ட ஆலயம் பிற்காலத்தில் சிறிது வளர்ச்சி பெற்றிருக்கலாம். முதலாம் இராசராச சோழனின் இரண்டு கல்வெட்டுக்கள் அங்கு உள்ளன.

இராசராசன் இலங்கை மீது படையெடுத்து இலங்கையரசன் மனைவியை கைது செய்து தஞ்சைக்கு கொண்டு வந்ததாகவும் கண்ணகியை வழிபடும் அவள் வேண்டுகோளுக்கு இணங்க இராசராசன் தஞ்சையில் கண்ணகிக்கு ஒரு கோயில் எடுத்தான் என்பதாகவும் இலங்கை வரலாற்று நூல் 'சூளவம்சம்' கூறுகிறது. இதனால் பற்றுக்கொண்ட இராசராசன் மங்கலாதேவி -- கண்ணகி ஆலயத்திற்குக் கொடை அளித்திருக்கலாம்.

ஒரு கல்வெட்டில் 'மாசாத்துவான்' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அவன் கோவலன் வழிவந்த பிற்காலத்தவனாக இருக்கலாம்.

6 மங்கலாதேவி கோயில் இன்னும் முழு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை ''தொல்பொருள் விஞ்ஞான முறைப்படி அல்லது வரலாற்றின்படி'' அது கண்ணகி கோயில் அல்ல என்று ஆராய்ந்து மறுக்கப்படவில்லை.

தமிழகத் தொல்பொருள் துறையைச் சார்ந்தவர்கள் யார் எப்பொழுது அங்குச் சென்று முறைப்படி ஆய்வை மேற்கொண்டார்கள்? அதிகாரி அறிக்கையில் தெளிவாக இல்லை.

கண்ணகி கோயிலே !

17—11—1963-ல் கரந்தைப் புலவர் சி. கோவிந்தராசனுர் அங்குச்சென்று அறிக்கை விட்டும், நாகப்பட்டினம் கோவை இளஞ் சேரன் அவர்கள் மூலமாகத் தமிழக அரசு சுமார் நான்காண்டுகட்கு முன்னரே அது கண்ணகிகோயிலே என்று அறிவித்தும், கலைக்கதிர் ஆனந்தவிகடன், தமிழ்ப் பொழில் போன்ற தமிழ் இதழ்களில் பத்தாண்டுகளாகச் செய்தி வெளிவந்தும் இப்பொழுதுதான் தமிழக தொல் பொருள் துறை 'அதிகாரி ஒருவர்' மறுப்புரை அளிக்கின்ருர்.

7. அங்குச்சென்று வந்த மத்தியத்தொல்பொருள்துறையைச் சேர்ந்த அதிகாரி திரு. கே. ஜி. கிருஷ்ணன் அவர்கள் அதன் தொன்மை, சூழ்நிலை, வரலாற்றுக் குறிப்பு இவைகளை வைத்து மங்கலாதேவி ஆலயம் கண்ணகி கோயிலாக இருக்கக்கூடும் என்று குறிப்பை எழுதியுள்ளார். தொல்பொருள் துறை அறிக்கையில் அதுபற்றிக் குறிப்பிட்டுள்ள அவர் அது குறித்து இந்து ஆங்கில நாளிதழிலும் கடிதம் எழுதியுள்ளார். (இந்து 12—1—1972)

1904-ஆம் ஆண்டு கூடலூர் அழகர் கோயில் கல்வெட்டுத்தான் படி எடுக்கப் பட்டுள்ளதே தவிர மங்கலாதேவி கோயில் கல்வெட்டு படி எடுக்கப்படவில்லை சுமார் 10-ஆண்டுகட்கு முன்னர்தான் திரு. கே. ஜி. கிருஷ்ணன் அங்குச் சென்று கல்வெட்டுக்களைப் படி எடுத்துள்ளார்.

சரியான பாதை (சுமார் 12 கி. மீ. மலைப்பாதை) அமைத்து அங்குக் கோடைக்கால வாழிடங்களை ஏற்படுத்தினுல் தென்னிந்தியா விலேயே சிறந்த கோடைக்கால இருப்பிடமாக மாறும் சூழல் அங்கு உள்ளது. தமிழக அரசு முயலுமாக !

* அன்னமரபிற் காலங்கண்ணிய என்னகிளவிகள்

ஏ. ஆதித்தன், தமிழாய்வுத்துறை, காமராஜ் பல்கலைக்கழகம்,

தொல்காப்பியனார் ஒன்பது வகையான வினையெச்ச அமைப்பினைக் கூறிய பின்றை.

> " பின்முன் கால்கடை வழி இடத்தென்னும்
> அன்ன மரபிற் காலங்கண்ணிய
> என்னகிளவியும் அவற்றியல்பினவே "

என்னும் நூற்பா மூலம் இவ்வறுவகை அமைப்புக்களும் வினையெச்சமாகச் செயல்படுவதனைக் குறிக்கின்றார். இவ்வறுவகை அமைப்புக்களும் தொடரில் செயல்படும் நிலையினை ஆய்வதே இக்கட்டுரை.

வினையெச்சத்திற்கு இலக்கண உரையாசிரியர்கள் விகுதியடிப்படையாகவே இலக்கணம் கூறுகின்றனர். பெரும்பான்மையான இலக்கண அறிஞர்கள் உருபின் நிலையிலே வினையெச்சத்திற்கு இலக்கணம் தருகின்றனர். தொல்காப்பியனார் ஒன்பது வகையான வினையெச்ச அமைப்பினைத் தந்து வினையெச்ச விளக்கத்தினைத் தருகின்றார். தொல்காப்பியர் குறிக்கும் ஒன்பதுவகை அமைப்புக்களில் சில தொடரில் வினையெச்சமாகச் செயல்படாத நிலையும் உள. இன்னமும் இவ்வமைப்புக்களில் சில வினைகொண்டு முடியுங்காலத்தும் வினையெச்சமாகச் செயல்படாத நிலையினையும், காணமுடிகின்றது. எனவே உருபன் நிலையிலோ அல்லது அன்மை உறுப்பாய்வு நிலையிலோ வினையெச்சத்திற்கு முழுமையாக விளக்கம் தருதல் இயலாத ஒன்றாக அமைகின்றது. 1

இன்னமும் ஒரு வினைவடிவம் முற்றுப் பெற்றுள்ளதா அல்லது முற்றுப்பெறாத நிலையிலுள்ளதா என்பதனையும், ஒரு வடிவம் வினையா அன்றி வினையில்லையா என்பதனையும், அமைப்பு நிலையில் கண்டறிதல் அரிதாகின்றது. என்னவோவெனின் வினையடியிலிருந்து தோன்றிய வடிவங்களெல்லாம் வினைகளாகச் செயல்படுவதில்லை. இன்னமும் பெயரடி எனக் கருதப்படுபவைகளிலிருந்து தோன்றிய வடிவங்களும் வினையாகச் செயல்படுகின்றன. 2 எனவேதான் வினையெச்சத்திற்கு முழுமையான விளக்கம் பொருண்மை நிலையில் கண்டறிதல் தேவையாகின்றது.

வினையெச்ச விளக்கம் :

தன்னளவில் வினைநிலை முழுமை பெறாது செயலையும், காலத்தையும், காரணத்தையும் உண்டாக்கி நின்று பிறிதொரு வினைகொண்டு

முடியும் வினையே வினையெச்சம் எனப்படும். தன்னளவில் முற்றுப் பெரு வினை தொடரியல் நிலையில் இன்னொரு வினைகொண்டு முடிவ தால் வினையெச்சம் என்ற பெயரினைப் பெறுகின்றது. எச்சவினையின் பொருளணுக்களை (Semantic atoms) ஈண்டுக் குறிப்பிடுதும்.

எச்சவினை

- (திடப்) பொருள்
+ செயல்
- வினை முழுமைநிலை
+ காலம்
+ எதிர்மறை
+ வினை முழுமை பெருநிலை
+ நிகழ் நிலை
- கருத்தா
+ காரணம்

+ வினை = வினையெச்சம்

வினையெச்சத்திற்கு இதனையே விளக்கமாகக் கொண்டு காப் பியர் கூறும் அன்ன மரபிற் காலங்கண்ணிய என்ன கிளவியாம் ஆறனையும் ஆய்ந்து காணலாம். முதலில் உரையாசிரியர்கள் அன்னமரபிற் காலங்கண்ணிய என்னகிளவியாம் ஆறனுக்கும் தரும் சான்றுகள் முறையானவைதாமா என்பது ஆய்வுக்குரிய ஒன்ருகும். இங்குக் காலங்கண்ணிய கிளவிகள் என்பது 'பின்', 'முன்' போன்ற காலப் பெயர்களா இல்லையேல் பெயரெச்ச அமைப்போடு இணைந்த 'பின்' 'முன்' போன்ற கூட்டு அமைப்புக்களா என்பதும் கேள்விக் குரியதே. பெயரெச்சத்தோடு இணைந்த 'பின்' 'முன்'. போன்ற கூட்டு அமைப்பினை இந்நூற் பாவிற்குச் சான்றுகளாக எடுத்துக் கொண்டால் இவை ஈண்டு குறிப்பிடப்பட்ட வினையெச்ச இலக்கணத் தினின்றும் முரண்பட்டு வருதலைக் காண்குதும்.

இக்கூட்டு அமைப்பினை பெயரெச்சமும் ஒரு நிலைச்சொற்களும் (Particles) இணைந்த வினையெச்ச அமைப்புக்களெனக் கூறுவர் டாக்டர் அகஸ்தியலிங்கம். 3 'பின்', 'முன்' போன்றவற்றை வினையடைப்பெயர்களாகக் கொண்டு இக்கூட்டு அமைப்பினைப் பெய ரெச்சமும் வினையிடைப் பெயர்களும் இணைந்த வினையடைத் தொட ராகச் (4) செயல்படும் பெயரெச்சத் தொடர் என்பர் டாக்டர் இசரயேல். 'பின்' 'முன்' 'கால்'' 'கடை' 'வழி' 'இடத்து' என்பன

குறிப்புப் பெயர்களாகக் கருதப்படுகின்றன. ஒரு வடிவம் தனது பொருண்மை நிலையில் வேற்றுமை உறவுநிலையில் வந்து, வடிவ நிலையில் வேற்றுமை உறுபினை ஏற்காத நிலையில் அமையுமாயின் அதனையே குறிப்புப் பெயர் என ஈண்டுக் குறிப்பிடுதும். பொருண்மைநிலையில் 'பின்' 'முன்' போன்றன பெயர்களுக்குரிய பொருளனுக்கள் அனைத்தும் உடைத்தாக முழுமையான பெயர்களாகவே செயலாற்றுகின்றன. ஆயின் வடிவ நிலையில் வேற்றுமை உறுபினை ஏற்காத நிலையில் அமைந்த ஏனைப் பெயர்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது.

எனவே 'வந்தபின்' 'வந்தக் கடை' போன்ற அமைப்புக்கள் பெயரெச்சமும் குறிப்புப் பெயர்களும் இணைந்த பெயர்த்தொடர்களே. இவை தொடரில் வேற்றுமை உறவு நிலையில் வருகின்றன, எனவேதான், இன்னொரு வினைகொண்டு முடிகின்றன. இக்கூட்டு அமைப்புக்கள வேற்றுமை உறவில்வரும் பெயரெச்சத் தொடர்கள் என்பதற்குத் தொடர்நிலையின் கண்ணேயும் சான்றுகள் உள.

மாரி வறந்தக்கால் போலுமே வாலருவி நாட
(நாலடியார் : 232 : 3)

போலும்' என்னும் சொல்லிற்கு முன்பு ஒரு வினையெச்சம் வருதல் இயலாது. இங்கு 'வறந்தக்கால்' என்பது 'வரண்ட பொழுது' என்னும் பொருளில் இரண்டாம் வேற்றுமை உறவு நிலையில் வருகின்றது. இன்னமும் ஏழாம் வேற்றுமையின் காலப் பொருண்மையில் வரும் குறிப்புப் பெயராகக் 'கடை' எனும் வடிவம் அத்துச் சாரியை பெற்று வருதலையும் காண்குதும்.

பெருநடை பெற்றக்கடைத்தும் (நாலடியார் 343 :3)

பொருண்மை நிலையில் 'பின்' 'முன்' 'கால்' 'கடை' 'வழி' 'இடத்து' என்பன வேற்றுமைப் பொருளில் வரும் காலத்தைக் குறிக்கும் குறிப்புப் பெயர்களே. காலப் பொருண்மையில் வந்து வினைகொண்டு முடிவதால்தான் இவற்றிற்குத் தொல்காப்பியனுர் வினையெச்சத்தகுதியினைக் குறித்தனர் போலும். இவை வடிவநிலையில் வேற்றுமை உருபினை ஏலாக்குறிப்பு பெயர்களாகவே ஈண்டுச் செயலாற்றுகின்றன.

அடிக் குறிப்புக்கள்

1. வினையெச்சம் ஓர் பார்வை - ஏ. ஆதித்தன் (1977)
2. ibid
3. வினையெச்சம் பற்றித் தொல்காப்பியர் - ச. அகஸ்தியலிங்கம் (1972).
4. வினையிடைப் பெயர்கள் - மோ. இசரயேல் (1975)

* இக்கட்டுரை எழுதும்போது எனக்கெழுந் ஐயப்பாடுகளை அகற்றி பல்லாற்றுனும் உதவி புரிந்த பேராசிரியர் டாக்டர். மோ. இசரயேல் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக.

இலக்கியத்தில் அழகியல் ஒரு முன்னுரை

து. மூர்த்தி, எம். ஏ.,
தொழில் நுட்பத் துணைவர், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

1. அழகியல் பற்றிய ஆய்வு பல நிலைகளில் வளர்ந்து வருகிறது. தொடக்க காலத்தில் அழகுபற்றிய ஆய்வு தனி என்றும் கலை பற்றிய ஆய்வு தனி என்றும் கருதப்பட்டது அழகுதான் கலையை வரையறுக்கிறது என்றும் கலைதான் அழகை வரையறுக்கின்றது என்றும் விவாதிக்கப்பட்டது பின்னர் கலையும் அழகும் பிரிக்க முடியாதவை என்பது ஏற்கப்பட்டு, அழகியல் ஆய்வு என்பது கலையியல் ஆய்வாகவும் அதுபோலவே கலையியல் ஆய்வு என்பது அழகியல் ஆய்வாகவும் கருதப்பட்டு வருகிறது. ஆராய்ச்சியின் வளர்ச்சியில் 'கலை அழகு' (Artistic beauty) என்றும், ''கலையில் அழகியல்'' (Aesthetice of Arts) என்றும் இருவேறு நிலைகள் ஏற்பட்டன.

1. 1. கலையில் அழகியல் என்பது மேலும் மேலும் இரண்டாகப் பகுத்து ஆராயப் பட்டது. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை போன்றவை தனியாகவும், இலக்கியம். இசை, நாடகம் போன்றவை தனியாகவும், பிரித்து ஆராயப்பட்டன.

2. கலை அல்லது இலக்கியத்தில் அழகுணர்ச்சி என்பது, விளைபொருள்களின் பெருக்கம் சமூகத்தில் மனிதனுக்கு மிகுந்த ஓய்வை ஏற்படுத்திய கட்டத்தில் ஏற்பட்டிருக்கலாம், எந்த ஒரு கலை அல்லது இலக்கியமும் ஒரு குறியீடாகவே முதலில் தோன்றிப் பின்னரே அக்கலை அல்லது இலக்கியம் அழகு வெளிப்பாட்டிற்குரிய கருவியாகவும் கருதப் பட்டிருக்க வேண்டும். கூட்டு வாழ்க்கை முறை இருந்த தொல் பழங்காலத்தில் கலைகளும் கூட்டுமுயற்சி யாகவே இருந்திருக்கவேண்டும். இக்கலைகளும், தொல்பழங்கால மக்களின் தொழிற்சார்ந்த கலைகளாகவே இருந்திருக்கும். கூட்டு வாழ்க்கைமுறை சிதைந்து, விளைபொருள்களின் பெருக்கத்தால் தனிச்சேமிப்பு முறை தொடங்கிய காலத்தில் மனிதனுக்கு ஓய்வு மிகுதியாகக் கிட்டியிருக்கும் இந்த ஓய்வே குறியீடாக இருந்த கலை இலக்கியத்தில் அழகுணர்ச்சியைப் புகுத்தியது எனலாம். பொதுவுடைமையாக இருந்த தொழிற் கருவிகள் தனிச்சேமிப்பு முறை ஏற்பட்டதும் தனிவுடைமையாக மாறியிருக்கும். தனிவுடைமையாக மாறிய இந்நிலையில் மனிதன் பெற்ற ஓய்வு, தொழிலுக்குத் தேவையான கருவிகள் என்ற நிலையை மாற்றி அழகான கருவிகள் என்ற நிலையை ஏற்படுத்தியதுஎனலாம். கருவியில் ஏற்பட்ட இம்மாற்றம்

கலை இலக்கியத்திற்கும் பொருந்தும் எனலாம். எனவே அழகியலின் தோற்றம் சமூக அமைப்பில் விளைபொருள்களின் பெருக்கம் எனலாம்.

3. அழகியல் என்றால் என்ன? எந்த ஒரு பொருளின் நுண்ணொழுங்கு அமைவும் அந்தப் பொருளின் அழகாகும் இக்கண்ணோட்டத்தில் உலகத்தில் எல்லாப் பொருள்களுமே அழகானவை தான் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. ஒரு பொருளின் அழகு என்பது அப்பொருளின் புறச்சூழல் மட்டும்தானா அல்லது பொருளின் அழகை மனஉணர்ச்சி தீர்மானிக்கிறதா என்ற வினாக்கள் எழுவது இயல்பு, காரணம் ஒரு பொருள் ஒருவனுக்கு அழகாய் இருப்பதாகத் தோன்ற இன்னொருவனுக்கு அழகற்றதாகத் தோன்றலாம். ஒரே பொருள் ஒருவனுக்கே கூட இருவேறு நிலைகளில் இருவேறு உணர்ச்சிகளை ஏற்படுத்தலாம். எனவே மனமே அழகைத் தீர்மானிக்கும் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது போலத் தோன்றுகிறது. இங்கு "அழகுணர்ச்சி" என்பது சிக்கலான வினாவாகிறது.

3. 1. அழகுணர்ச்சி அல்லது அழகியல் என்பது மேலோட்டமான நிலையில் மனம் பற்றியதாகத் தோன்றலாம். ஆனால் மனம் அல்லது சிந்தனை என்பதே புறப் பொருள்களின் விளைவு என்பதை நினைவுகொள்ள வேண்டும். எனவே ஒரு பொருளின் அழகு என்பது அப்பொருளின் புறத் தன்மைகளைப் பற்றிய, புறப் பொருள்களால் உண்டான மனித சிந்தனையின் கணிப்பு எனலாம்.

3. 1. 1. ஒரே சூழ்நிலையில் ஒரு பொருள் இருவர்க்கு இருவேறு அழகுணர்ச்சியை ஏற்படுத்துகிறது என்றால், அந்த இரண்டு பேரும் இருவேறு புறச்சூழல்களால் உருவான இருவேறு சிந்தனையை உடையவர்கள் என்று பொருள். ஒரு பொருள் ஒருவனுக்கே இருவேறு நிலைகளில் இருவேறு அழகுணர்ச்சியை ஏற்படுத்துகின்றது என்றால், அவன் அந்த இருவேறு நிலைகளில் இருவேறு புறச்சூழல்களால் உருவான இருவேறு சிந்தனையை உடையவனாக இருக்கிறான் என்று பொருள். எனவே அழகியல் என்பது பொருளின் புறஆய்வு என்று கொள்ளவேண்டும். அப்படியானால் இலக்கியத்தில் அழகியல் என்றால் என்ன?

3. 2. கவிஞனின் பார்வை சாதாரண மனிதனின் பார்வையில் இருந்து வேறுபடுவதால்தான், கவிஞனால் படைக்கப்படும் எந்தப் பொருளும் புதுப் பொலிவைப் பெறுகின்றது. பொருள்களின் மூலம் உணர்வுகளைப் பெறும் கவிஞனின் பார்வைகளை அவன் வாழும் சமூகமும், அவன் வாழ்விக்க விழையும் சமூகமும் தீர்மானிக்கின்றன.

கவிஞன் வாழும் சமூகத்தை நியாயப்படுத்துபவனுகவும், வாழும் சமூகமே என்றும் நிலையாக இருக்கக்கூடியது என்பவனுகவும் இருப்பின் அவன் தன் இலக்கியத்தில் படைக்கக்கூடிய அழகியல் கருத்தியல் கண்ணேட்டத்துடன் அமைந்திருக்கும். மாருக, சமூகம் மாறக்கூடியது என்பதை ஏற்றுச் சமூக மாற்றத்திற்கான இலக்கியம் படைக்கும் கவிஞனின் படைப்பில் நடப்பியல் அழகியல் திகழும் எனலாம். எனவே இலக்கியத்தில் அழகியல் என்பது பொருளின் நுண்ணெழுங்கு அமைவை, படைப்பாளன் எந்தச் சமூகத்தின் சார்பாளனுக இருந்து சிறப்பிக்க விழைகிருன் என்பதைப் பொறுத்ததாகும்.

4. இந்த 'அழகியல்' இலக்கியத்தில் ஏன் இடம் பெறுகிறது அல்லது ஏன் இடம்பெற வேண்டும் என்பது அடுத்து ஆராயத் தக்கதாகும். கவிஞனின் வேலை பொருளின் பௌதீகத் தன்மையைக் கூறுவதன்று, கவிஞன், ஒரு படி மேலே சென்று, அப்பொருளை வாழும் மனிதர்களுக்காகப் படைக்க வேண்டியவனுக இருக்கிருன் வாழும் மனிதர்களுக்காக என்ற நிலையில் அவர்கள் நெஞ்சில் வாங்கிக் கொள்ளுமாறு சொல்ல வேண்டியவனுகிருன். மனிதனின் நெஞ்சம் நனவுகளை விட கனவுகளையே பெரிதும் விழைகிறது - கனவுகளிலேயே தோய்ந்து அமிழ்கிறது, கனவுகளிலும் மனிதமனம் ரம்மியமான கனவுகளையே பெரிதும் விரும்புகிறது. எனவேதான் கவிஞன் பொருளை அழகுபடுத்த வேண்டியவனுகிருன்.

வாழ்க்கைக்காகப் படைப்புகளைத் தர வேண்டிய கவிஞன் மெத்தப் பொறுப்புடையவனுக இருக்கவேண்டும். வாழ்க்கை கனவுகளின் மந்தையன்ன அந்தநனவுகள் புடமிடப்படும் தீக்கொழுந்தன்ன ரம்மியக்கனவுகளின் மயக்கத்தில் இருக்கும் மனித வாழ்வைத் தகர்த்து, நனவுகளின் நடைமுறைச் சூட்டை மனிதனுக்குப் புரிய வைக்க வேண்டியது கவிஞனின் மகத்தான கடமையாகும். இவ்விடத்தில்தான் 'அழகியல்' என்பது இலக்கியத்தில் எப்படிக் கையாளப்பட வேண்டும் என்ற சிக்கல் எழுகிறது.

5. இலக்கியத்தில் கையாளப்படும் அழகியல் சமூக அமைப்பு-உறவுகளில் இருந்து மனிதனை அந்நியப்படுத்துவதாகவும் அமையலாம். அல்லது புற உலகின் இயக்கங்களைப் பற்றி அணு அளவும் கவலைப்படாத இரசனை உணர்ச்சியாகவும் அமையலாம் அல்லது, வாழும் சமூகத்தின் உயிரோட்டத்தை உணர்த்தி வாழ்க்கையின் உயிர் எது என்பதையும் விளக்கலாம்.

5. 1. விடியும் கிழக்கின் சிவப்பொளியை மூன்று கவிஞர்கள் காண்கிருர்கள் என வைப்போம். "பொன்னுர் மேனியனே"

என்று ஒருவனுக்கும், "குங்குமத் தோட்டம் இங்கேன் பூத்தது" என்று இன்னொருவனுக்கும், "எந்த ஏகாதிபத்தியத்தின் கால்கள் இந்தப் பூமியில் வெட்டப்படுகின்றனவோ" என்று மூன்றுமவனுக்கும் தோன்றலாம். மூன்றுமே இலக்கியத்தில் ஒவ்வொருவரும் அமைக்க விரும்பும் அழகியல்தான். ஆனால் அதன் தன்மைகளுக்கு இடையில்தான் எவ்வளவு வேறுபாடு?

6. அழகியல் இலக்கியம் மனிதனில் ஏற்படுத்த வேண்டிய விளைவுகளுக்கு அடிப்படையாய் இருக்கிறது: இந்த அழகியலைக் கவிஞன் கையாளும் விதம் இலக்கியத்தின் விளைவுகளைத் தீர்மானிக்கிறது. வெறும் இரசனைக்காக இலக்கியம் என்று முடிவு கட்டிக் கொண்டு இலக்கியம் செய்வோர் அழகியலை வெறும் போதைப் பொருளாகக் கையாள்வர். ஆனால் இலக்கியம் வாழ்கைக்காக என்று தீர்மானித்துப் படைக்க வருவோர் அழகியலைப் போர்க் கருவியாகப் பயன்படுத்துவர். வேறொரு வகையில் சொல்ல வேண்டும் என்றால், அழகியல் என்பது பொருளுக்கும் மனத்துக்கும் (கருத்துக்கும்) மட்டுமே உள்ள உறவல்ல வாழ்வின் தன்மைகளை விளக்கப்பொருளை வாழ்வோடு உறவாக்கிக்கொள்ளும் நிலையில், பொருளுக்குக் கவிஞன் கொடுக்கும் விளக்கமாகும் எனலாம்.

7. இலக்கியத்தில் அழகியலைப் பயன்பாடு கருதாமல் வெறும் இரசனைக்காக மட்டும் பயன்படுத்தும் கவிஞன் - வெறும் 'அழகியலைப் பாடும் கவிஞன் கருத்தியல் கவிஞனவான். பயன்பாடு கருதிப் பாடும் கவிஞன் சமூக நடைமுறைகளை விளக்க முற்படும் நிலையில் அழகியலைப் பயன் படுத்துவதால் நடப்பியல் கவிஞனவான்.

7. 1. நடப்பியல் கவிஞன். உள்ளது உள்ளபடியே கூறுவதோடு மட்டுமின்றி, ஏன் இவையிவை இப்படி உள்ளன என்று கூறும் நிலையில்தான் அழகியலைப் பயன்பாடு கருதிப் பயன்படுத்த முடியும். இவை இவை இப்படித்தான் இருக்கும் என்று சொலலும் 'விதிநடப்பியல்' தன்மையில் இருந்து மாறி காரண காரியத் தன்மையோடு பாடும்போதுதான் கவிஞன் திறனய்வு நடப்பியலுக்கு மாறுதிறன், இங்குதான் கவிஞன் கையில் 'அழயல்' போர்க் கருவியாகப் பயன் படுகிறது எனலாம்.

7, 1. 1 இதற்கு அடுத்த நிலையில் திறனய்வு நடப்பியலோடு பாடுவதோடு, இந்தச் சமூகம் எந்தெந்த முறைகளில் இயங்கி வருகிறது என்பதைப் புரிந்துகொண்டு இந்தச்சமூகம் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்ற தீர்வோடு பாடும் நிலையில் கவிஞன் சமூகவியல் நடப்பியல் கவிஞனக மாறுகிறன். சமூகவியல் நடப்பியல்

கவிஞன் கையில்தான் அழகியல் தன் முழுமையைப் பெறும் எனலாம்.

8. எனவே, வெறும் அழகியல் என்பது இலக்கியத்தைப் போலிமை ஆக்குவதாகும். பொருள்கள் அல்லது இயற்கை, வருணனைகளின் வளர்ப்பிடமன்று.

வாழ்வின் விளக்கங்களுக்கு பொருள் அல்லது இயற்கைக் கருவியாகப் பயன்படுத்தப் படவேண்டும்: வாழ்வின் விளக்கங்களை மறுத்த அல்லது புறக்கணித்த அழகியல் கவித்துவத்திற்குக் காரணமாகவும் இருக்கலாம். கவித்துவம் இலக்கிய நியாயமாகவும் இருக்கலாம். ஆனால் கவிஞன் சமூக நியாயங்களுக்காகப் போராடுபவன். அவன் படைப்புகளில் சமூக நியாயங்கள் உக்கிரம்பெறும்போது கவித்துவம் அல்லது அழகியல் குறைவுபடுவது போலத் தோன்றலாம். ஆனால் உண்மையான கவித்துவம் சமூக நியாயங்களின் போராட்ட வெற்றியில்தான் அடங்கி இருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
தமிழ்த்துறை

பதினைந்தாவது கருத்தரங்கு
சீவகசிந்தாமணிக் கருத்தகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை, பதினைந்தாவது கருத்தரங்கினை மார்ச்சு 18, 19 ஆகிய இரு நாட்களிலும் விரிவாக நடத்தியது, சீவக சிந்தாமணி என்னும் பெருங் காப்பியத்தினை ஆய்வுப் பொருளாக மேற்கொண்டது. கடவுள் வாழ்த்தொடும் பல்கலைக் கழகத்தை நிறுவிய அண்ணாமலை அரசர் வாழ்த்தொடும் இணைவேந்தர் முத்தைய வள்ளல் வாழ்த்தொடும் கருத்தரங்கம் தொடங்கியது. உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பெருமக்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் திரு. லெ. ப. கரு இராமநாதன் செட்டியார் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்கள் யாழ்நூல் ஆசிரியர் அருள்மிகு விபுலானந்த அடிகளார் தொல்காப்பிய புத்துரை ஆசிரியர் டாக்டர் ச. சோமசுந்தர

பாரதியார் ஆகிய இருவர் படத்தினையும் திறந்து வைக்கும் சிறப்பு நிகழ்ச்சியும் இக்கருத்தரங்கில் அமைந்தது பாராட்டுக் குரியதாக இருந்தது.

பேராசிரியர் திருமுறைச் செல்வர் க. வெள்ளை வாரணனார் அனை வரையும் வரவேற்று பேசுகையில் இதுகாறும் இத்துறையில் 300க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன என்றும் இக் கட்டுரைகள் தமிழ் உலகிற்கும் ஆராய்ச்சி உலகிற்கும் நலம்சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன என்றும் இக்கருத்தரங்கு சீவகசிந்தாமணி என்னும் சமணப் பெருங்காப்பியம் பற்றி நடை பெறுவதால் சமயச் சார்பின்றி ஆய்வு நோக்கத்தில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் இக்கருத்தரங்கில் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்கள் இருவர் படத்தினை முன்னாள் தமிழ்ப்பேராசிரியர் ஒருவர் திறந்து வைப்பது பாராட்டுக்குரியது என்றும் மொழிந்தார்கள். பேராசிரியர் இராம நாதனார் அவர்கள் பல்கலைக் கழக வளர்ச்சியிலும் குறிப்பாகத் தமிழ்த் துறையின் வளர்ச்சியிலும் நாட்டம் கொண்டு ஆவன செய்து வருவதை மனமுவந்து பாராட்டினார்கள்.

பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் விபுலானந்த அடிகள், சோமசுந்தர பாரதியார் படங்களைத் திறந்து வைத்துக் கருத்தரங்கையும் தொடங்கி வைத்தார்கள். இவ் விரு பெருமக்களின் காலத்திலும் தாம் கொண்ட தொடர்பினை நினைவு கூர்ந்தார்கள். விபுலானந்தர் துறவியாக இருந்தும் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப் புகழ்ந்தார்கள். பாரதியார் புகழ்பெற்ற வழக் கறிஞராக இருந்தும் தமிழுக்காக வாழ்ந்த சிறப்பினை எடுத்துரைத் தார்கள். அண்ணமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய செட்டிநாட்டரசர் அண்ணமலையார் அவர்கள் புகழ் பெற்ற பேராசிரிய பெருமக்களைத் தேடி அழைத்துவந்து இண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பணி யாற்றச் செய்த மேன்மையை எடுத்து விளக்கினார்கள். இப்போது இணைவேந்தராக வீற்றிருக்கும் முத்தைய வேந்தர் அவர்களும் தகுதி மிக்க பேராசிரிய ஆசிரியப் பெருமக்களை அழைத்து வந்து சிறப்பிக்கும் திறனையும் புகழ்ந்தார்கள். டாக்டர் நாவலர் பாரதியார் அவர்களை அழைப்பதற்கு அண்ணமலை அரசர் அவர்கள் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்களது பரிந்துரையைப் பயன்படுத்திய வாலாற்று நிகழ்ச்சியினையும் கூறினார்கள்.

18—3—78 சனிக்கிழமை பற்பகல் 4-30 மணியளவில் பேரா சிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் தலைமையில் சீவக சிந்தாமணிக் கருத்தரங்கு முதல் பகுதி தொடங்கியது. திரு. அ. ஆனந்தநடராசன் நாமகள் இல்ம்பகம் என்னும் தலைப்பில் இவ்விலம்

பகம் காப்பியத்தகுதி படைத்தது. இவ்விலம்பகத்தில் இயற்கை மணங்கள் பேசப்படுகின்றன, சிந்தாமணியை மணநூல் என்று கூறுதற்கேற்ப இவ்வாறு இயற்கை மணங்களை அழகுபடப் படைக்கின்ருர் திருத்தக்கத்தேவர் என எடுத்து மொழிந்தார். திரு. கு. சுந்தரமூர்த்தி நாட்டு வளம் என்னும் தலைப்பில் தேவர் நாட்டுவளம் பாடும்போது காப்பியக் கூறுகளை அமைத்திருக்கும் நுட்பமான பாங்கினை எடுத்து மொழிந்தார். சீவர்த்தமானர் புராணத்துச் சீவக சரித்திர ஆய்வு என்னும் தலைப்பில் திரு பி. சீ. இராமானுசாச்சாரி, வடமொழி புராணத்தில் காணப்படும் காப்பியப் பெயர்கள் தமிழ்ச் சீவக சிந்தாமணியில் எவ்வாறு இடம் பெறுகின்றன, அப்பெயர்கள் வடமொழியில் எப்பொருளுடையன என்பன பற்றி ஒப்பாய்வு அடிப்படையில் கட்டுரை படித்தார்கள்.

19—3—78 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கருத்தரங்கின் இரண்டாவது பகுதி துணைப் பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் தொடங்கியது. தலைவர் சிந்தாமணியின் காலம் என்னும் தலைப்பில் பேசும்போது தேவர் நரிவிருத்தம் பாடினுர் என்னும் சான்றினைக் கொண்டு இவர் காலம் சம்பந்தருக்கு முற்பட்டதாக 6-ஆம் நூற்ருண்டாக இருக்கலாம் என்று மொழிந்தார். திரு. சோம. இளவரசு. சச்சந்தன் என்னும் தலைப்பில் இவன் மிகு காமத்தாலும் மிகு நம்பிக்கையாலும் தனக்குத்தானே பகைதேடிக் கொண்டான் என விளக்கிக் காட்டினுர் விமலையார் இலம்பகம் என்னும் தலைப்பில் திரு. கு. இராசேந்திரன் விமலையை மணந்தது ஏனைய மகளிரை மணந்ததிலிருந்து வேறுபட்ட நிலையை உடையது என மொழிந்தார். டாக்டர் ஆறு. அழகப்பன் சிந்தாமணி ஆய்வுகள் ஒரு கண்ணோட்டம் என்னும் தலைப்பில் ஏழு வகையாகப் பகுத்துக் கொண்டு இப்பகுப்புக்களில் சிந்தாமணி பற்றிய ஆய்வுகள் எவ்வாறு நடை பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டு வரைபடத்தின் மூலம் விளக்கிக் காட்டினுர். திரு சுப.கோவிந்தராசன், குணமாலை என்னும் தலைப்பில் மானிடப் பெண்கள் என்ற வரிசையில் குணமாலையே முதலாமவள் என்றும் இப்பாத்திரப் படைப்பு அருமையாக உள்ளது என்றும் விளக்கினுர். சிந்தாமணியின் கூத்துத் திறம் என்னும் தலைப்பில் திரு. செ. வைத்தியலிங்கம் தேவர்காட்டும் கூத்துக் காட்சிகள் பலவற்றை எடுத்துக்காட்டி இக்கால மேலைநாட்டுத் திறனுய்வாளர்கள் கூறும் இலக்கணங்கள் படிந்திருக்கும் பான்மையினை எடுத்துக்காட்டி விளக்கினுர்கள். பேராசிரியர் திரு. க.வெள்ளைவாரணனுர் 'தொல்காப்பிய நெறியில் திருத்தக்கதேவர்' என்னும்பொருள் பற்றிக் கட்டுரை படித்தார். தொல்காப்பிய யாப்பு சிந்தாமணியில் எவ்வாறு அமைந்து அழகு செய்கின்றது என்பதனையும் பிற்காலப் பாவினங்கள் முழுமையான இலக்கணம் பெருமையையும் காட்டித்

தொல்காப்பிய யாப்பு எவ்வளவு சிறப்புடையது என்பதனைச் சான்று காட்டி நிறுவினர்கள். டாக்டர் கொ. இலக்குமணசாமி அவர்கள் தெய்வம் தொழாஅள் என்ற தலைப்பில் தெய்வம் என்பது சமணக் காப்பியங்களில் காமக் கடவுளைக் குறிக்கும் என்றும் இந்து சமய நூல்களில் ஞாயிறு திங்கள் மழையைச் சுட்டும் என்றும் மணிமேகலை யில் புத்த பகவான் அல்லாத பிற தெய்வங்களைக் குறிக்கும் என்றும் விரித்துரைத்தார். டாக்டர் சோ. ந. கந்தசாமி, காப்பியக் குறிக் கோள் என்னும் தலைப்பில், சிந்தாமணியின் இறுதி இலம்பகம் காப் பியக் குறிக்கோளைக் கண்ணாடிபோல் காட்டுகிறது. சிந்தாமணி மட்டுமல்ல மற்ற காப்பியங்களிலும் இறுதிப் பகுதியில் இக்குரல் ஒலிக்கிறது என்றார் சிந்தாமணியும் நச்சினார்க்கினியரும் என்னும் தலைப்பில் திரு. சி சிவசங்கரன் நச்சினார்க்கினியரின் காப்பிய உரைத் திறனை எடுத்து விளக்கினார். திரு. சுப. இராமநாதன் காப்பியங் களில் சிந்தாமணி என்னும் தலைப்பில் சிந்தாமணியின் யாப்பினைக் கொண்டு இடைச் செருகல் பாடல்களை எவ்வாறு முடிவு செய்யலாம் என ஆய்வுரை நிகழ்த்தினர். தேவர்சுட்டும் விழுமிய பொருள் என்னும் தலைப்பில், திரு. நா, இராமாநுசம் அறத்தின் சிறப்பும் பொருள் இன்பங்களின் நிலையாமைகளும் வீடுபேற்றிற்கு வாயிலாகத் துறவும் பேசப்படுவதை உரைத்தார்.

19—3—78 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் துணைப் பேராசிரியர் டாக்டர் கொ. இலக்குமணசாமி, மூன்றும் பகுதிக்குத் தலைமை ஏற்றார். சிந்தாமணி சங்க இலக்கியப் பதிவுகள் என்னும் தலைப்பில் திரு. உ. பழநி, சங்க இலக்கிய கருத்துக்களும் வரிகளும் என்னும் தலைப்பில் உவமைகள் சிந்தாமணியில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதனை மெய்ப்பித்தார். கேமசரியார் இலம்பகம் என்னும் தலைப் பில் திரு. ப. தங்கராசு இவ்விலம்பகம் அருகதேவன் வழிபாட்டையும் சமண சமயக் கோட்பாடு களையும் நிலையாமைக் கருத்துக்களையும் வலியுறுத்துவதாக உள்ளது என விளக்கினா. திரு. செ. சந்திர சேகரன் விசயை என்னும் தலைப்பில் விசயையின் முன் வாழ்க்கையில் தாயன்பு இருந்தமையையும், பின் வாழ்க்கையில் பற்றற்ற உள்ளத் தோடு கூடிய துறவறம் மேலோங்கி நின்றமையையும் எடுத்துரைத் தார். சிந்தாமணியில் பிற அணிகள் என்னும் தலைப்பில் செல்வி ந. பூரணி தற்குறிப்பேற்றவணி முதலான அணிகளைத் தேவர் எவ் வாறு நயம்படக் கையாண்டுள்ளார் என்பதனை விளக்தினர். திரு. துரை. பட்டாபிராமன், காப்பியத்துள் காப்பியம் என்னும் தலைப்பில் காந்தருவ தத்தையார் இலம்பகம் சிறுகாப்பியமாக விளங்குகின்றது என்பதனை ஏதுக்களுடன் எடுத்துக்காட்டி விளக்கினர். கோவிந் தையாரிலம்பகம் என்னும் தலைப்பில் திரு. வெ பழனியப்பன் கோவிந்தையாரைச் சீவகன் மணக்காமைக்குக் காரணம் தன்நிலைக்கு

ஒவ்வா என்று கருதியமையே காரணம் ஆகுமேயன்றிக் குல வேறுபாடு பாராட்டினன் என்று கருதுதல் பொருந்தாது எனச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டினார். திரு. த. இராச வன்னியன் கட்டியங்காரன் என்னும் தலைப்பில் அவன் தொல்காப்பியர் கூறும் நிம்பிரி கொடுமை வியப்பு முதலான பழிப்பவருக்கு இலக்கியமாக இருந்தான் என்பதனை விரித்துரைத்தார். திரு. அழ. பழனியப்பன் திருத்தக்கதேவரும் சேக்கிழாரும் என்னும் தலைப்பில் சிந்தாமணிக்குப் பெரியபுராணம் பகைக் காப்பியம் அன்று, சிந்தாமணியின் சொல்லும் கருத்தும் பெரியபுராணத்தில் இடம்பெறுகின்றன என்பதனை எடுத்து விளக்கினார். தேவர் இருவர் – மணி இரண்டு என்னும் தலைப்பில் திரு. சி. கதிர்வேல் சிந்தாமணியையும் சூளாமணியையும் எடுத்துக் காட்டிச் சூளாமணியில் காமப்பின்னல்கள் மிகையாக இல்லை எனவுரைத்தார். திரு. பெ. இலக்குமிநாராயணன் சிந்தாமணியில் இயற்கை என்னும் தலைப்பில் காப்பியப் புனைவுகளில் இயற்கை இடம் பெறும் திறத்தையும் உவமை முதலிய அணிகளில் இயற்கைபெறும் முதன்மையையும் சிந்தாமணி ஆசிரியர் இயற்கையை ஆளுகின்ற ஆளுமையையும் எடுத்து விளக்கினர். திரு அ. ஞானப்பிரகாசம் கம்பரும் தேவரும் என்னும் தலைப்பில் கம்பர் தேவரிடம் ஓர் அகப்பை முகந்து கொண்டேன் என்று கூறினாலும் தேவர் கூறிய நிகழ்ச்சிகளையும் பண்புகளையும் எவ்வெவ்வாறெல்லாம் எடுத்தாண்டு கம்பர் அழகு படுத்துகின்றார் என்பதனை இரு பெருங்காப்பிய ஒப்பீட்டால் அழகுற விளக்கினார்.

பேராசிரியர் க. வெள்ளைவாரணர் தம் முடிவுரையில் சிந்தாமணிக் கருத்தரங்கில் 25-க்கு மேற்பட்ட ஆய்வுரைகள் நிகழ்ந்தன என்றாலும் இன்னும் ஆய்வுரைகள் நிகழ்த்துதற்கு ஏற்ற காப்பிய விரிவு சிந்தாமணியில் உள்ளது என்றும் அது சமய காப்பியமாயினும் வாழ்வுக்குத் துணையான நெறிமுறைகளை எடுத்துக் கூறுகிறது என்றும் தமிழர்கள் தம் பழம் இலக்கியப் பெருமையை மறந்துவிடக் கூடாது என்றும் எடுத்துக்கூறினார்கள். திரு. செ. வைத்தியலிங்கம், அனைவருக்கும் நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவுபெற்றது.

*கால்டுவெலும் அவர் வாழ்ந்த காலமும்

(நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சை.)

சென்ற நூற்றாண்டில் தமிழ் மொழிக்குத் தொண்டுசெய்த மேல் நாட்டு அறிஞருள், பலவழியாலும் முன்னணியில் வைத்து எண்ணக் கூடியவர், போதகர் தலைவர், அறிஞர் இராபர்த் கால்டுவெல் (Bishop Dr. ROBERT CALDWELL) என்னும் பெரியவராவார் இவருடைய, அறிவியற் கட்டளைகட்குட்பட்ட காய்தலுவத்த லில்லாத நுண்ணிய ஆராய்ச்சியால், தமிழ்மொழியின் தொன்மை யையும் தூய்மையையும் தொன்றுதொட்டு தொடர்ந்து வாழ்ந்து வரும் வன்மையையும் எம்மொழியின் கூட்டும் வேண்டாது இயங்க வல்ல தனிமையையும், அறிஞருலகம் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. தமிழகத்தின் தொன்மை வரலாறு மக்கட்பண்பு, வழிபாட்டுமுறை பலதுறைகளிலும் இவர் ஈடுபட்டுச் சில அரிய கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும், இவருடைய தனிச் சிறப்புக்கு இவர் இன்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்னர், 1856-ம் ஆண்டில் ஆய்ந்து வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் சிறந்த மொழிநூலே காரணமாகத் திகழ்கின்றது. இந் நூல், இப்பெரியாராலேயே பலவாறு விரித்து 1875-ம் ஆண்டில் இரண்டாவது முறை வெளியிடப் பெற்றுள்ளது. 1913-ஆம் ஆண் டில் இவருடைய மருகர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் வியத் (Rev. J. L. Wyatt) என்பவரும், சென்னைப் பல்கலைக்கழகத் திராவிடமொழிப் பாடதிட்டக் குழுத்தலைவர், தோ. இராமகிருஷ்ண பிள்ளையும் சேர்ந்து இந்நூலின் மூன்றாவது பதிப்பை, சில மாறுதல் களுடன் பதித்தார்கள். இது நூறாண்டுகளுக்கு மேலாகத் தன் துறையில், தனி நூலாகத் திகழ்ந்து வருகின்றது.

கால்டுவெல், 1814-ஆம் ஆண்டில் அயர்லந்து தேயத்தில் ஒரு சிற்றூரில் பிறந்தார். இவர் பிறந்த சில ஆண்டுகளில், இவருடைய பெற்றோர்கள், தங்கள் தாய்நாடாகிய சுகாத்லந்துக்கு (Scotland)த் திரும்பி, கிளாஸ்கோ (Glasgow) நகரத்தில், தங்கள் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். இவர் பதினாறுவது வயதுவரை பெற்றோருட னிருந்து கல்வி பயின்றார். பின்னர் அயலூரிலிருந்த ஒரு கலைத் தொழிற் பள்ளியிற் சேர்ந்து பயின்று ஓவியத்துறையில் தேறி, பரிசும் பெற்றார். எனினும், ஓவியத் தொழிலையே தன் வாழ்க்கைக்கு உரிய தொழிலாகக்கொண்டு வாழ மனம்கொள்ளாது தெய்வப் பணியில் தொண்டு செய்வதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு, இருபதாவது வயதில், இலந்தன் சமயசங்கத்தில் (London Mission) தொண்டராகச் சேர்ந்தார். பின்னர், அச்சங்க ஆதரவில் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மாணவனாகச் சேர்ந்து பயின்று கலைமாணிப் (Bachelor of Arts) பட்டமும் பெற்றார்.

---

* இக்கட்டுரையின் உரிமை கட்டுரையாளர்க்கே.

இவர், மாணவராகப் பயிலுங்காலத்தில் ஐரோப்பாவில் (Europe) மொழி நூற்பயிற்சி சிறப்பாகப் போற்றப்பெற்று வந்தது. மொழி நூற் பயிற்சியால். மக்கள் வரலாற்றிலும் வாழ்க்கையிலும் பல உண்மைகளைக் காணவியலும் என்ற கருத்து. அறிஞர் உள்ளத்தில் இடம்பெற்று வளர்ந்தது. மொழி ஆராய்ச்சி அறிவியலுக்குட்பட்ட வரையறைகளுடனும் முறையுடனும், நெறிப்படுத்தப் பெற்றுத் தொடங்கிய காலம் அது. அக்காலத்தில், இத்துறையில் ஜெர்மனியரே (Germans) முன்னேறி வந்தார்கள் ஆங்கிலப் பல்கலைக்கழகங்களில் இத்துறையில் வல்லவர்கள் அருகியே காணப் பெற்றனர். ஆனால், கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் கிரேக்கமொழிப் பேராசிரியராக இருந்த தானியேல் சாந்த்போர்த் (Sir Daniel Sanford) என்பவர். ஒப்பியல் மொழி நூலில் (Comparative Philology) சிறந்த புலமையுடையவராக விளங்கித் தன் மாணவர்களுக்கும் இப்புதிய துறையில் ஊக்கம் பிறப்பித்துப் பல மொழிகளின் பண்புகளையும் பயிற்றிவந்தார். இயற்கையிலேயே இத்துறையில் விருப்பம் கொண்டிருந்த கால்டுவெலுக்கு. இப்பேராசிரியருடைய ஆர்வத்தாலும் பழக்கத்தாலும், ஏதேனும் வாய்ப்பு நேருமானால், தானும் இத்துறையில் சிறந்ததொரு தொண்டு செய்யவேண்டும் என்ற வேட்கை தோன்றி, உள்ளத்தில், உறுதியாக இளமையிலேயே உறைவதாயிற்று. அந்த நாட்களில், ஆங்கில நாட்டில், தமிழ்மொழியின் இலக்கணத்தைத் தெரிந்து கொள்வதற்குப் போதிய நூல்கள் கிடையாது. 1828-ஆம் ஆண்டில் வெளிவந்த, ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற தமிழ் இலக்கணம் ஒன்றுதான் கிடைக்கக் கூடியதாக இருந்தது. அந்த இலக்கணத்தை எழுதியவர், அந்தர்சன் (Robert Andersen) என்பவர் (இவர் சென்னை அரசாங்கத்தில் வேலை பார்த்தவர் உடல்நலம் குன்றியமையால் 1819-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்று, இங்கிலாந்தில், கிழக்கு இந்திய வணிகக் குழுவினர் நடத்திவந்த கல்லூரியில் கீழைநாட்டு மொழிகளின் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்,) மற்றொரு தமிழ் இலக்கணம், ஜர்மனியிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்று 1836-ஆம் ஆண்டு வெளிவந்தது; இது வீரமாமுனிவர் இலக்கண நூல்களை அடிப்படை யாகக்கொண்டு தெளிவாகவும், கற்போருக்குப் பயன்தரும் முறையிலும் எழுதப் பெற்றிருந்ததேனும், சொற்றொடரியல் நன்கு எழுதப் பெறவில்லை; இலக்கண விதிகளுக்கு எடுத்துக் காட்டுகளும் இலக்கியங்களிலிருந்து காட்டப் பெருமல், விதிகளுக்கேற்பப் புதுவதாகப் படைத்துக் காட்டப்பெற்றிருந்தன இதன் ஆசிரியர் இரேனியூஸ் (Rhunius) என்பவர் ஜாமனியில் புரஸ்யா (Prussia) வைச் சேர்ந்தவர்; ஆற்றலும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்; உலையாத ஊக்கமுடையவர், 1814-ஆம் ஆண்டு. அதாவது. கால்டுவெல் பிறந்த ஆண்டு சென்னைக்கு வந்து சமயப்பணி தொடங்கியவர்; சென்னையில்

1817-ஆம் ஆண்டு, தங்கசாலைக்கு அருகில் ஒறு இடத்தை வாங்கிக் கிறிஸ்தவக் கோயில் ஒன்று கட்டத் தொடங்கினர்; அம்முயற்சி, அருகிலிருந்த இந்து சமய மக்களால் தடை செய்யப்பெற்று, அக் கோயில் போபாம் பெருவழியில் பின்னர் கட்டப்பெற்றது. திருநெல் வேலிப் பாளையங் கோட்டையிலேயே நீண்ட நாளிலிருந்து, தமிழ்ப் புலவர்களிடம் கல்வியையும் அன்பையும் பெற்ருர். தமிழ் மக்கள்; நல்ல நெறியுடையவர்கள் எச்சமயத்தாராயினும், எவ்வாறு அவர் களை வியந்து பாராட்டினர்கள் என்பதை, இவர் இறந்தபோது, திருநெல்வேலி, நெல்லையம்பலப் புலவர், திருப்பாற்கடனுதக் கவி ராயர் பாடிய கையறுநிலையுள்

> ‘ வேதங்கள் யாவும் அறிந்தவர் போலும் மெய்மையாம் தன்மையை விளக்கும்
> போதகர் போலுங் கோலத்தாற் காட்டிப் பொருட்படாத் தீமையே யியற்றும்
> பாதக ரிருக்க விரேனியூ சென்போன் பண்புள்ள குருவென வறிந்தும்
> ஏதமில்லாத மரணமே யவனை யேற்றதா லென்பய னடைந்தாய் ’

என்னும் செய்யுள் காட்டுகின்றது.

பல்கலைக்கழகப் பயிற்சி முற்றுப் பெற்றவுடன், 1837-ஆம் ஆண் டில், இவரை. இலந்தன் சமய சங்கத்தார், தென் இந்தியாவில் சமயப்பணி செய்வதற்காகத் தேர்ந்தெடுத்து, கப்பலில் ஏற்றிவிட் டார்கள். அக்காலத்தில் ஆங்கிலத் துறைமுகங்களிலிருந்து இந்தி யாவிற்கு வரும் கப்பல்கள் எல்லாம் ஆப்பிரிக்காவின் தென்முனை யைச் சுற்றி வரவேண்டியிருந்ததால், கப்பல்கள் சென்னை வந்து சேருவதற்குக் குறைந்தது நான்கு மாதமாகும். கப்பலில் தங்க வேண்டிய காலத்தையும் வீண்போக்காது ஏதேனும் கற்க வேண்டும் என்றும் விரும்பிய இளைஞன் கால்டுவெலுக்கு ஒரு நண்பர் அகப் பட்டார். அவர் சென்னை அரசாங்கத்தில் பணியாற்றுபவர்;பிரவுன் (Charles Philip Brown) என்னும் பெயரினர்; ஆரியம் நன்கு கற்றவர்; ஆந்திரமொழியில் சிறந்த பயிற்சி உடையவர்; அம்மொழி யின் யாப்பமைதியை ஆராய்ந்து 1827-ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் ‘தெலுங்கு யாப்பிலக்கணம்’ ஒன்று எழுதி வெளியிட்டிருந்தார். இத்த ஆராய்சிக்காகச் சென்னை அரசாங்கக் கல்விக் கழகத்தார் இவ ருக்கு ஒராயிரம் வராகன் பரிசளித்தார்கள். வேமன்னுவின் பாடல் களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார்; இன்னும் பல அரிய வேலைகளைச் செய்து சிறந்த ஆந்திரமொழி அறிஞராக விளங்கினவர். இவருடைய துணையால், கால்டுவெல், ஆந்திரம், ஆரியம் இரண்டின் பல பண்புகளையும் விளக்கமாகத் தெரிந்து கொண்டார். இவர்கள் ஏறிவந்த கப்பல், 1838-ஆம் ஆண்டு ஜனவரிமாதம் சென்னை துறை முகம் வந்து சேர்ந்தது.

அக்காலத்தில், சென்னை, செல்வவளம் பெருகிய பட்டினமாக வும், பெருக்கும் பட்டினமாகவும் திகழ்ந்தது. தென்னாட்டில் ஆட்சிக் கேயன்றி காட்சிக்கும் தலைநகராக விளங்கியது. இவற்றுக்குமேலாக தமிழ்ப்பயிர் தழைத்தோங்கும் செழும் புலமாகவும் இலங்கியது. இங்கு கிறிஸ்தவர் சமயத்தைப் பரப்பவந்த அயல் நாட்டாரும், ஆட்சித் துறையிலமர்ந்துள்ள ஆங்கிலேயரும், தாம் தாம் மேற் கொண்ட பணி இனிது நிறைவேறுதற்குத் தமிழ் மொழியைத் திறம் பெற கற்கவேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது. செல்வவளம் பெற்றிருந்த தமிழ் மக்கள், பண்டுபோல் புலவர்களைப் போற்றி னார்கள். பலவேலைகளிலும் அமர்ந்து பகல் எல்லாம் உழைத்து இல்லம் திரும்பிய பொதுமக்கள், தங்கள் உள்ளத்திற்கும் உணர் வுக்கும் ஆறுதலாகவும் பயனாகவும் சமயத் தொடர்பான பெருநூல் களைத் தக்கோர் வாயிலாகக் கேட்டு இன்புற விழைந்தனர், எனவே, பலவழியாலும், பலதிறப்பட்ட புலவர்களுக்கும் சென்னை நல்வர வளித்தது. தொன்று தொட்டு வந்த தமிழ்ப் பயிற்சியும் மறையாமல் அங்கங்கு உயிர் வைத்துக் கொண்டிருந்தது. திருவாவடுதுறைச் சிவஞான முனிவருடைய மாணவ வழியினர் பலர் சென்னையில் தங்கினார்கள். அவ்வாறே திருவாரூர் வைத்தியநாத நாவலர் மாணவ மரபினருட் சிலரும் சென்னையை இருப்பிடமாகக் கொண் டனர். எடுத்துக்காட்டாக. இராமாநுசக் கவிராயர், மழவை மகா லிங்க ஐயர் முதலிய வர்களை முற் கூறிய பகுதிக்கும், சிதம்பரப் பண் டாரம். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், முதலியோரைப் பிற்கூறிய பகுதிக்கும் கூறலாம். இவர்களெல்லாம், பழைய முறை யைக் கைவிடாது பாதுகாத்தவராவார்.

1812-ஆம் ஆண்டில், நாட்டு மொழிகளின் பயிற்சிக்காக, சென்னை அரசாங்கத்தார் ஒரு கல்விச்சங்கம் (Colleges of the Fort St. George) அமைத்தார்கள். இக்கல்விச் சங்கக் கல்லூரிகளின் நோக்கம், முதன்மையாக, அரசாங்கப் பணியாளர்களுக்கு நாட்டு மொழிகளில் தேர்ச்சி பெறத்தக்க பயிற்சியளிப்பதே யெனினும், இம்மொழிகளின் பொதுவான இலக்கண முறைகளைக் காணலும், இம்மொழிகளுள், ஒன்றுக்கு ஒன்றுள்ள தொடர்பை அறிதலும், இம் மொழிகளின் மூலத்தை ஒருவாறு பார்த்தலும், இதன் நோக்கமாக வும் கொள்ளப் பெற்றிருந்தது. அகராதி, இலக்கணம். மொழி பெயர்ப்பு முதலிய பணிகளுக்குப் பொருளுதவி செய்வதையும் மேற் மெற்கொண்டிருந்தனர். இக்கல்விச் சங்கத்தைத் தோற்றியமைத் தவர்களில், மொழிநூற் புலமையும் தமிழ்ப் புலமையும் மிக்க எல்லீசும் (Francis White Ellis) தெலுங்கு மொழியில் வல்ல காமெலும் (A. D. Campbell) குறிப்பிடத் தக்கவராவார். இந்த இரு பேரறிஞர்களுடைய கட்டுரைகளாலும், அதிலும் சிறப்பாக

எல்லீசின் மொழிநூற்புலமையாலும், பதினெட்டாவது நூற்றுண்டில் நிலவிவந்த, 'எல்லா இந்திய மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவை என்னும் கொள்கை,' தென்மொழிகளுக்குப் பொருந்தாது என்பதை அறிஞருலகம் தெரிந்துகொண்டது. இக் கல்விச் சங்கம் புதிய முறையில் தமிழை வளர்க்கத் தொடங்கியது. 1814ஆம் ஆண்டு, மநு நூலின் இரண்டு பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்த இக்கல்விச் சங்கத் தலைமைத் தமிழாசிரியராகிய சிதம்பரப் பண்டாரத்துக்கு, ஓராயிரம் வராகன் பரிசு வழங்கியது. இவ்வாசிரியர், தமிழ் மொழியின் அமைப்பை விளக்கி ஒரு சிறு நூலும் செய்திருந்தார். இப்புலவர், தான் பெற்ற பரிசைத் தனக்குப் பயன்படுத்திக்கொள்ளாமல் ஒரு சத்திரத்தைக் கட்டிவைத்தார். இச்சங்கம், மேலும் 1825ஆம் ஆண்டில், தாண்டவராய வாத்தியார் தொடுத்த 'அமரகோசம்' முதலிய மூன்று நூல்களுக்கு ஒரு பரிசு அளித்தது; ஞானமுதலி மொழிபெயர்த்த 'அராபிக் கதைகளுக்கு' ஆதரவளித்தது. தமிழ்ப்புலவர்களுக்குப் புது முறையில் பயிற்சியளித்து நற்சான்று வழங்கிவந்தது. கம்பராமாயணத்தை முதன் முதலாகப் பதிப்பித்த திரு. வேங்கடாசல முதலியார், இச்சங்க நற்சான்று பெற்றவர்களுள் ஒருவராவார். இச் சங்கத்தில் இரண்டு சிறந்த தமிழ்—ஆங்கில அகராதிகளும், வீரமாமுனிவர் அகராதி, இலக்கணநூல்களும், வேறு சில சிறு இலக்கண நூல்களும் வெளிவந்துள்ளன. இச்சங்கம், 1812ஆம் ஆண்டு தோன்றி, தனக்கு எனத் தனியாக ஒரு அச்சுக்கூடம, நூல்நிலையம், நூல் வெளியீட்டுப்பகுதி முதலிய எல்லா உறுப்புக்களும் பெற்று, அரசாங்க ஆதரவும் பெற்று 1854ஆம் ஆண்டுவரை நிலைத்திருந்தும், தமிழ் மக்களின் ஊக்கக் குறைவால் தக்கவாறு பயன்தராது மறைந்தது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர் முதலிய சிறந்த புலவர்ர்கள் இச் சங்கத்தில் வேலைபார்த்திருக்கிருர்கள். என்ன பயன்? ஆதரவும், வாய்ப்பும், கொடையும் பெருகிவருங்காலங்களில், கண்ணை மூடிக் கொள்ளுவது நம்மவர் பழக்கமாகவிருந்து வருகிறது. (இப்போது மொழிவளர்ச்சிக்கு ஒரு ஆக்கமான காலம்; பலவழியாலும் ஆதரவும் கொடையும் கிடைக்கின்றன தமிழ் வளர்ச்சியை சிறு எண்ணங்கள் கூடி சிதைக்குமா? பேரெண்ணம் கூடிப் பெருக்குமா? தமிழறிஞர்கள் விழித்திருக்கவேண்டிய நாள் இது!)

கால்டுவெல், சென்னையில், 1838ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மூன்றுண்டுகள் தங்கி, தான் மேல்கொள்ளவிருக்கும் பணிக்குத் தக்கவாறு தன்னைப் பண்படுத்திக் கொண்டார். அப்போது, இவருக்கு தக்க தமிழறிஞர்களும், கல்வித்துறையில் வல்லவர்களும், அரசாங்க அலுவலிலுள்ள அறிஞர்களும் உற்ற நண்பராயினர். இவருடன் நெருங்கியிருந்தவர்களில், சமயத் தொண்டர்களாகிய

துரு (Rev. W. H. Drew), பவர் (Rev. Dr. Henry Bower), அந்தர்ஸன் (Johu Anderson) என்பவர்களும் அரசாங்க அலுவலி லிருந்த தாம்ஸன் கிளார்க் (Thomson Clarke) என்பவரும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

இவர்களுள், துரு, சிறந்த தமிழறிஞர். இராமானுஜக் கவி ராயரிடம் தமிழ் பயின்றவர். திருக்குறளில் அறுபத்துமூன்று அதி காரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். திருக்குறளை பரிமேலழகர் உரைக்கு விளக்கத்துடனும், நன்னூலைப் புதிய உரை யுடனும், கவிராயர் வெளியிடுவதற்குத் துணையாகவிருந்தவர். சிந் தாமணியை வெளியிடுவதற்குச் சில பகுதி வரையில் செப்பம்செய்து வைத்திருந்தார். பவர், சிறந்த தமிழறிஞர் சிந்தாமணியை நச்சி னார்க்கினியர் உரையுடனும், ஆங்கிலத்தில் சுருக்கமான தலைப்புக் களுடனும். சமண சமயத்தைப் பற்றிய தெளிவான கட்டுரையுடனும் நாமகளிலம்பகம் வரையில் அழகான முறையில் 1864-ஆம் ஆண்டில் வெளியிட்டவர். இவர் சிந்தாமணிக் கருத்துக்களையும், சமய நுட்பங் களையும், இலக்கியப் பண்புகளையும் தஞ்சையிலிருந்த ஒரு சமண சமயப் புலவரிடம் தெரிந்து கொண்டார் என்று, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, கரந்தை இராசாராம் முதலியார் என்னும் ஒரு முதியவர் தெரிவித்தார். பவர், விவிலிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பையும் புகழ் நூலையும் இறுதியாகச் செப்பனிட்டவர். கால்டுவெலுக்கு இலக்கியத் தமிழிலும், வழக்குத் தமிழிலும் பயிற்சியளித்தவர். இவ ருடைய சமயப் பண்பையும் தொண்டையும் போற்றி, கந்தர்புரி தெய்வமாக்குரவர் (Archbishop of Canterbury) தெய்வநூலறிஞர் (Doctor of Divinity) என்னும் சிறப்பை இவருக்கு அளித்தார். அந்தர்ஸன் என்பவர், சென்னையில் கல்விப் பெருக்கத்துக்குத் தொண் டாற்றியவர். இவர் 1837-ஆம் ஆண்டு நிறுவியதும் அந்தர்ஸன் பள்ளிக்கூடம் என்று வழங்கப் பெற்றதுமான கல்வி நிலையந்தான் இப்போது ''கிறிஸ்தவக் கல்லூரி'' என்று புகழ்பெறச் சென்னையில் விளங்குகிறது. கிளார்க் அரசாங்க அலுவலிலிருந்தவர். இராமா னுஜக் கவிராயரிடம் தமிழ் பயின்றவர். மதுரை மாவட்டத்தில் துணைத் தண்டற்றலைவராக வேலைபார்த்தவர். கொடைக்கானலில் முதல் முதலாக வீடு கட்டிக் குடியிருந்தவர்களில் ஒருவர், இவ ருடைய வீட்டில்தான் கால்டுவெல் கொடைக்கானலில் குடியிருந் தார். இறுதி எய்தியதும் அங்குதான்.

சென்னையில் இவர், தங்கியிருந்த நாட்களில், தென்னாட்டு கல்வி வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது கிழக்கு இந்திய வணிகக் குழுவினர், மக்களுடைய கல்விப் பெருக்கத்தைக் குறித்துப் போதிய ஏற்பாடுகள் செய்யவில்லை என்பது, இந்திய மக்களுக்கும், ஆங்கிலப்

பாராளுமன்றுக்கும் (British Parliament) ஒரு பெருங்குறையாகவே இருந்து வந்தது. சென்னை அரசாங்கமும், சிறுபான்மை கல்வித் துறையில் ஏற்பாடுகள் செய்ததேயன்றி நிலைத்த திட்டம் வகுத்து ஒன்றும் செய்யவில்லை. இதனுல் மனப்புழுக்கம் கொண்ட சென்னை மக்கள் எழுபதினுயிரவர் கையெழுத்திட்டு, அப்போது மா-மன்ருடி (Advocate General) யாகவிருந்த ஜியார்ஜ் நார்த்தன் (George Norton) என்பவரை முன்வைத்து, மாநில ஆட்சித் தலைவரிடம், ஒரு பெரு விண்ணப்பத்தின் வழியாகத் தங்கள் குறைகளை, 1839-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் நாள், அறிவித்தார்கள். அவ்விண்ணப் பத்தில், கல்வியின் பயனுல் எல்லா நாடுகளும் முன்னேறுவதைக் கண்கூடாகக் காணும் தங்களுக்கு அக்கல்வியை உயர்ந்தபடியிலும் பரந்த நோக்கிலும் பயிற்றிவைக்க நிலையங்கள் வேண்டும் என்பதை யும், இந்தியாவின் ஏனைய பகுதிகள் கல்வியின் பயனைத் துய்த்துப் பல்வளமும் பெருக்கிக் கொண்டிருக்க, சென்னை மக்கள் இருளி லிருத்தல் முறையல்ல என்பதையும் வற்புறுத்தினுர்கள். அக்காலம், இந்திய அரசினர், ஆங்கிலமுறைக் கல்வியைப் பரப்ப முடிவுசெய்த காலம். இவற்றின் பயனுக, ஒரு தமிழ்ப் புது ஆண்டு நாளில், (1841-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள்) சென்னையில், மாநில ஆட்சித் தலைவருடைய தலைமையில், செல்வர்களும், அறிஞர்களும். ஆட்சிப் பகுதி நீதிப் பகுதிகளின் தலைவர்களும் கூடிய ஆயிரத்தைந் நூறுவர்கட்கு மேற்பட்ட ஒரு சிறந்த கூட்டத்தில், உயர்நிலைக் கல்வியைப் பயிற்றுவதற்கான ஒரு கல்விநிலையம் நிறுவப்பெற்றது; இது, முன்னரே அமைந்திருந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை அடிப் படையாகக் கொண்டது; சென்னை மாநிலக் கல்லூரிக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், அடிப்படையாகவுள்ளது. இந்த உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக திங்கள் ஒன்றுக்கு எழுநூறு ரூபாய் ஊதியத்தில், பவல் (Eyre Burton Powell) என்னும் அறிஞர் நிய மிக்கப்பெற்ருர்; மழவை மகாலிங்கம் ஐயர் தமிழ் ஆசிரியராக நிய மனம் பெற்ருர். ஆங்கிலமொழி வாயிலாகவே கல்வி பயிற்றப் பெற்றது. இந்தக் கல்வி நிலையத்திற்கும், முன்னர் எல்லீசு, காமெல் முதலியவர்கள் முயற்சியால் நிறுவப்பெற்ற கல்விச் சங்கத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை; மேலும் அக்கல்விச் சங்கத்தின் புலமை மரபு இப்பள்ளியில் பின்பற்றப் பெறவில்லை என்றும், நாட்டு மொழி களின் வளர்ச்சிக்கு இப்பள்ளியின் திட்டம் அவ்வளவு பயனளிக்காது என்றும், சில மேல்நாட்டு அறிஞர்கள் கருதினுர்கள்.

சென்னையில் தங்கியிருந்த காலத்தில். கால்டுவெல், தமிழ்ப் புலமையின் பண்டைய மரபையும், புதுமுறைப் புலமையையும். கல்வியில் மக்களுக்குள்ள கருத்தையும் நன்கு தெரிந்து கொண்டார். தமிழ் மொழி, பண்பு, நாடு முதலியவற்றைப்பற்றி, நூல்கள்,

கட்டுரைகள் வழியாகவும், அறிஞருடன் பழகிய பழக்கத்தாலும், தானே நேரில் ஆய்ந்தும், பல செய்திகள் தெரிந்துகொண்டார். பிறகு, தான் சமயத் தொண்டாற்ற வேண்டிய திருநெல்வேலி மாவட்டத்துக்குப் புறப்பட்டு, கால் நடையாக நடந்து சென்ருர். இவ்வாறு நடந்து செல்லுவதில் வழியிலுள்ள பல இடங்களையும் அமைதியாகப் பார்க்கலாம் என்பதும், மக்களுடைய பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் நேரிலேயே தெரிந்துகொள்ளலாம் என்பதும், இவருடைய நோக்கம். சோழ நாட்டிலுள்ள சிதம்பரத்தையும் கோயிலையும் கண்டார்; பின்னர், தரங்கம்பாடியில் சில நாள் தங்கி, அங்கு தேனியச் சங்கத்தாரது (Danish Mission) சமயத் தொண்டையும், தமிழ்ப் பணியையும் அறிந்தார்; பின்னர், தஞ்சையில் சில நாள் தங்கி, பெருவுடையார் கோயிலைக் கண்டு வியந்தார்; அங்கு அரசனது ஆதரவு பெற்றவரும், கிருஸ்தவ சமயத் தொண்டருள் தூய்மையாலும், தொண்டாலும், உண்மையன்பாலும், உயர்ந்தவருமான சுவார்த் (Rev. Schwartz) என்பவர் பணிகளைக் கண்டு பணிந்தார். சுவார்த் தொகுத்து வைத்திருந்த ஒன்பதினுயிரம் சொற்கள் அடங்கிய தமிழ்-இலத்தீன் அகராதியை, இவர் பார்க்க நேர்ந்ததோ இல்லையோ என்பது தெரியவில்லை. அடுத்தபடி, நீலகிரி மலைக்குச் சென்று, அங்கிருந்த, போதகர் தலைவர் ஸ்பென்ஸர் (Bishop Spencer) என்பவருடன் ஒரு திங்கள்வரை தங்கியிருந்தார். பிறகு, கோயம்புத்தூர் வழியாக மதுரை வந்து சேர்ந்தார்; வழியில் இவருற்ற இடர்கள் பல.

பாண்டியர் பழம்பதியாகிய மதுரை மூதூர் இவருக்கு ஆறுதலளித்தது; கோயிலின் சிறப்பும் கோமகன் மாளிகையும் இவர் உள்ளத்தைக் கவர்ந்தன. அப்பொழுதுதான், சில ஆண்டுகளுக்கு முன்னர் (1834), அதுவரை யாழ்ப்பாணத்தில் சமயப்பணி செய்துகொண்டிருந்த அமெரிக்க சமய சங்கத்தார் (American Mission), தங்கள் நிலையம் ஒன்றை மதுரையில் நிறுவிப் பணிசெய்து கொண்டிருந்தார்கள். இந்த அமெரிக்க சமய சங்கத்தாருள் பலர் சிறந்த தமிழறிஞர்களாக இருந்தார்கள். முதன் முதலாக வந்தவர்களில் ஹாய்சிங்டன், (Hoisington) சைவ சித்தாந்தநூல்களுள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்; திரேசி (Rev. Dr. W. Tracy) என்பவர், செந்தமிழும் வழக்குத் தமிழும் தெளிவாகத் தெரிந்தவர். கிரேக்க மொழியில் புலமை மிக்கவர். அப்போது திருமங்கலத்தில் தங்கிப் பணியாற்றி வந்தார்; பிற்காலத்தில், விவிலிய நூல் மொழிபெயர்ப்பில் சிறந்த தொண்டாற்றியுள்ளார். கால்டுவெல், இவருடன் ஒரு நாள் திருமங்கலத்தில் தங்கியிருந்தார். இந்த திரேசியின் மகனர் திரேசி (Rev. J. E. Tracy) பழங்காசுகள் பல சேர்த்து வைத்திருந்தார், அவைகளைக் கொண்டு நாட்டு வரலாற்றை

ஆராய்ந்து 'பாண்டியர், சேதுபதிகள் காசுகள்' என்று ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதி எழுபது ஆண்டுகளுக்குமுன் வெளியிட்டார். இந்த அமெரிக்க சமய சங்கத்தாரால் 1842-ஆம் ஆண்டில் திருமங் கலத்தில் தொடங்கப்பெற்ற கல்வி நிலையம், நாளடைவில் வளர்ந்து இப்போதைய அமெரிக்கன் கல்லூரியாக மதுரையில் புகழ்பெற நிற் கின்றது. இச்சங்கத்தாருள், வழி வழி தமிழ்த் தொண்டாற்றிய வர்களும் உண்டு. இதன் தொடக்கக் காலத்தில் புகழ்பெற பல வாண்டுகள் மதுரையில் தொண்டற்றிய சாந்தலர் (Rev Chandler) என்பவரின் மகனார் சாந்தலர் என்பவரே, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிக்கு முதல் பதிப்பாசிரியராக விருந்து அப்பணியைத் தொடங்கி வைத்தவர், இச்சங்கத்தைச் சார்ந்த சத்தர் (Schudder M D.) என்பவர், நூருண்டுகளுக்கு முன்னரே சிந்தாமணியை வெளியிடுவதற்குப் பல சுவடிகளையும் ஒப்புநோக்கி உண்மைப் பாடங்களைக்கண்டு ஒரு நல்ல படி செய்து வைத் திருந்தார். இப்போது அந்தக் கையெழுத்துச் சுவடியும் குறிப்புக் களும் எங்கேனும் அமெரிக்க நூல் நிலையங்களிலிருக்கக்கூடும். இதைச் சார்ந்த தொண்டர்கள் வழியாகத் தமிழ் மொழியின் பெருமையை உணர்ந்த வித்னி (Wm. Dwight Whitney) என்னும் தலைசிறந்த அமரிக்க மொழிநூற்புலவர் குறிப்பிடுவதிலிருந்து' இத்தொண்டர்களின் தமிழ்ப்பற்றையும் ஆர்வத்தையும் நாம்தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு, கால் நடையாகவே, மெய்வருத்தம் பாராது பசி நோக்காது மெல்ல நடந்து, பலவூர்களையும் பலதிறப்பட்ட மக்களை யும் பார்த்துக்கொண்டு, தான் பணியாற்றவேண்டிய எல்லையாகிய நெல்லை நாட்டை. 1841-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அடைந்தார், அந்நாட்டில், கிறிஸ்தவ சமயம் வேரூன்றி நின்ற நாசரத் என்னும் ஊரிலுள்ள கிறிஸ்தவக் கோயிலில், அம்மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை,

§ '' கங்குல் கழிந்தது காண்! காலையுங் கையது காண்!
காரிருட் செயல்களெலாங் கழற்றி எறிவோமே;
பொங்கொளி போர்க்கவசம் போர்த்து செயல் புரிவாம்;
புண்ணியன் ஏசுவினை நண்ணிய வாழ்வீரே! ''

என்னும் பொருளுள்ள விவிலியத் திருமொழியை அடிப்படையாகக் கொண்டு, ஒரு ஞானப் பேருரை நிகழ்த்தினர், சிலநாட்கள், அந்த

* The Dravidian tongues have some peculiar phonetic elements, are richly polysyllabic, of general agglutinative

structure, with prefixes only, and very soft and harmonious in their utterance; they are of a very high type of agglutination, like Finnish and Hungarian; and the author has been informed by an American who was born in Southern India and grew up to speak its language vernacularly along with his English, a man of high education and unusual gifts as a preacher and writer, *that he esteemed the Tamil a finer language to think and speak in than any European tongue known to him.*

" The Life end Growth of Language. "

---

§ The night is far spent, the day is at hand; let us therefore cast off the works of darkness, and let us put on the armour of light ".

Romans XXX 12

ஊரிலும் அருகிலிருந்த முதலூரிலும் தங்கி, மறு ஞாயிற்றுக்கிழமை, முதலூர் கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஞானப்பேருரை நிகழ்த்திவிட்டு, பின்னர், தான் பணியாற்றுவதற்கெனத் திருவருள் வகுத்துவைத்த இடையன்குடிக்குப் போய்ச் சேர்ந்தார்.

இடையன்குடி, திருநெல்வேலிக்குத் தென்கிழக்கில் நான்கு காவதத் தொலைவில், பனங்காடுகள் அடர்ந்த செம்மணற் பரப்பில் பாலை நிலத்தின் பண்பெல்லாம் குறைவற நிறைந்த ஒரு சிற்றூர். கதிரவன் வெம்மையால் எப்போதும், அவ்வூர் கொடிய வெப்பம் மிகுந்ததாகவேயிருக்கும். கோடையும், கடுங் கோடையுமான இரு பருவங்களேயன்றி வேறு பருவங்கள் இங்கு நுழைவதில்லை. குளிர் மிக்க நாட்டிற் பிறந்து வளர்ந்த ஒரு இளைஞன், இத்தகைய கடுவெயில் மிக்க. எவ்வித இயற்கை வளனும் செயற்கை நலனுமில்லாத ஒரு பட்டிக்காட்டில், தன் வாழ்நாள் முழுவதும் கழிக்கத் துணிவு கொண்டதை, (பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்து சிலநாட்கள் பட்டினங்களில் பழகியமையால் சிற்றூர் வாழ்க்கையை வெறுக்கும் இளைஞர்களைக் காணும்) நாம் கருதும்போது இவருடைய உள்ளத்தின் உறுதியும், தெய்வப் பணியில் கொண்டுள்ள திட்பநிலையும். ஊன்நோக்கும் இன்பம் வேண்டி உழலாது வான்நோக்கும் வழி நிற்கும் வன்மையும். நம்மை அறியாமலே இவரையும் இவர்போன்ற உறுதியுடையாரையும், வணங்கி வாழ்த்துகிறவர்களாகின்றோம். இடையன்குடியாகிய பாலை, தமிழ்ப்புலவர்கள் உள்ளத்தில் தமிழ் வளரும் சோலையாக மாறிவிட்டது; இவரை வாட்டிய கோடை நம்மைக் குளிர்விக்கின்றது. எதனால்? இவரது செயற்கரும் தமிழ்ப் பணியால். ஒவ்வொரு தமிழனும் தன் வாழ்க்கையில் ஒருநாளேனும்

சென்று வணங்கவேண்டிய தமிழ்த்திருப்பதி இடையன்குடி என்ருல் மிகையாமோ? மொழிநூற்புலவர் கூட்டம் ஐந்தாண்டுக்கு ஒரு முறையேனும் அங்கு நடைபெருவிடில், நாம் நன்றியுடையோ மாவோமா?

இடையன்குடிக் கோயிலும், வேதியர் இல்லமும், குடியிருப்பும் சீர்கேடாகவுள்ளதைக் கண்ட கால்டுவெல், முதலில் அவற்றை அச் சூழலின் நிலைக்கு ஏற்றமுறையில், சீர்பெற அமைத்தார். கல்வியின் இன்றியமையாமையை அவ்வூர் மக்கள் நன்கு உணருமாறு செய்து, ஆண் மக்களும் பெண் மக்களும் கல்வி பயிலுவதற்கான வாய்ப்புக் களை ஏற்படுத்தினர். பெண் கல்வியில் மக்களுக்கு இருந்த மாறு பாட்டைப் போக்கினர். சமயத்துறையில் மக்கள் ஈடுபட்டு உண்மை யான பயனைப்பெறவேண்டி முயன்ருர். தான் இளமையிலேயே உறுதிகொண்ட மொழிநூல் வேலைக்கு ஆகவேண்டிய குறிப்புக்களை யெல்லாம், தன் வேலையோடு வேலையாகச் சேர்த்துவந்தார்,

இடையன் குடியில், இவர் பணிசெய்து கொண்டிருக்கும்போது அதற்கு மூன்று காவதத் தொலைவிலுள்ள சாயர்புரத்தில் போப்பையர் (Rev. G. U. Pope) தெய்வப்பணியும் கல்விப்பணியும் செய்து கொண்டிருந்தார். அங்கு ஒரு கல்விச்சாலை அமைத்து; தமிழ். ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் முதலிய மொழி களையும், எண் தத்துவம், முதலிய கலைகளையும் கற்பித்துக் கொண் டிருந்தார். பள்ளிக் கூடமும், மாணவர்கள் உண்ணும் காலமும் உறங்கும் காலமும் போக, மற்ற எல்லாக் காலத்திலும் நடந்து வந்தது. போப்பையரும் இரவு 11 மணிவரை கற்பித்து வந்தார். இவருக்குத் துணையாக, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முதன்மை யாகத் தேறிய செய்மூர் என்னும் ஞானக்கண் ஒன்றே கொண்ட அறிஞர், கல்வி பயிற்றிவந்தார். அக்காலத்தில், இவ்வளவு மொழி களும், கலைகளும், ஒரே இடத்தில், ஒருங்கே, நம் நாட்டில் எந்தக் கல்வி நிலையத்திலும் பயிற்றப்பெறவில்லை; மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் போன்ற ஒரு கல்வி நிலையமாக, சாயர்புரத்தைக் கொண்டு வரவேண்டுமென்பதே போப்பையரின் கனவு; இதன் திறமையைத் தெரிந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தார், இதற்கு ஒரு நூல் நிலையம் அமைப்பதற்காக, 1848-ஆம் ஆண்டு, பொருளுதவி செய் தார்கள். சமயப்பணியிலும் சிறந்த தொண்டுகள் செய்தார். அவ் வூரில் புதிதாக ஒரு கோயில் கட்டினர்; சமய சம்பந்தமான சில சிறு நூல்கள் வெளியிட்டிருந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் தொண்டு செய்தோருள் முதலணியில் வைக்கக்கூடியவரென்றும், கல்வித் தொண்டில் இவரே முதல்வரென்றும் பாராட்டினர்கள். எனினும், இவர் 1850-ஆம் ஆண்டில் அவ்வூரை விடும்படியாயிற்று.

மக்கள் பண்பையும் மாணவர் தகுதியையும் நன்கு உணராமல், அளவுக்கு மேற்பட்ட அறிவைப் புகட்டியமையாலும். மாணவரை வரையறைகட்கு உட்படுத்தும் வகையிலும் கற்பிக்கும் வகையிலும் தவறு கண்டவிடத்துக் கொடிய தண்டனைகளைக் கையாண்டு வந்த மையாலும், பலரும் இவரிடம் வெறுப்புக் கொண்டனர்.

'' நன்றுற்றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்ருக் கடை'' என்னும் தமிழ் மறையின் பொருளை

அவர் நன்குணராக்காலம்.

இடையன் குடிக்கு ஐந்து மைல் தொலைவில் சுவிசேஷபுரத்தில் **சச்சந்தர்** (Edward Sargent) என்பவர் சமயப்பணி ஆற்றிவந் தார். பல இனிய பண்புகள் வாய்ந்தவர். தமிழ் மொழியை நன்கு பயின்றிருந்ததோடு தமிழர்கள் போலவே தமிழ் பேசும் பழக்க முடையவர். நாட்டுப் பழக்க வழக்கங்கள், மக்கள் பண்புகள், கருத் துக்கள் முதலியவெல்லாம் நன்கு தெரிந்திருந்தார். இவருடன் அடிக்கடி கலந்து பேசிப் பல செய்திகளைத் தெரிந்து கொண்டது, தான் பணிதொடங்கிய நாட்களில் பெரிதும் பயனுடையதாகவிருந்த தென, கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நாட்களில், நாகர்கோயிலில், கிறிஸ்தவச் சமயத் தொண் டர்களின் நிலையம் சிறந்த பணியாற்றி வந்தது. அதில். இலந்தன் சமய சங்கத்தைச் சார்ந்தவரான மால்த் (Rev. Charles Mault) என்பவர் ஒரு அச்சுக்கூடம் வைத்து பல தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தார். அவருடைய மனைவியார், ஆங்கில நாட்டில் முடிசூடா மன்னனாக அரசு செலுத்திய வரலாற்றுப்புகழ் பெற்ற ஆலிவர் கிராம்வெலின் (Oliver Cromwell) மகள் மரபில் வந்தவர். இவர் களுடைய முதல் மகள் எலிஜா (Eliza) என்பவரும், தந்தையா ருடைய தொண்டில் ஈடுபட்டு. தமிழ் நூல்கள் அச்சுக்கோப்பதைப் பார்த்தல், பிழை திருத்தல் முதலிய தமிழ்த் தொடர்பான வேலை களைச் செய்து வழக்குத்தமிழில் வல்லவராக இருந்தார், கால்டுவெல் தன்னுடைய இருபத்தொன்பதாவது ஆண்டில். இருபத்தொரு ஆண்டு நிரம்பிய அந்த எலிஜா அம்மையாரை மணம் செய்து கொண்டார். இருவரும் மனையற வாழ்க்கையை மாண்புடன் இடையன் குடியில் தொடங்கிச் செம்மையாக யாவரும் போற்ற நடத்திவந்தார்கள்.

இடைவிடாது உள்ளத்தானும்; உடலானும் உழைக்கும் கால்டு வெலுக்கு, கடுங் கோடையில், இடையன் குடியின் வெம்மை தாங்க முடியாதாயிற்று; இவருடைய உள்ளமோ, உழைப்பின்றி, வெயி

லுக்கு அஞ்சி அயர்ந்திருக்க இடந்தரவில்லை. அருகே, உவரிக்கரையில், தண்ணிய இடமாக அமைந்திருந்த இளஞ்சுனை என்னும் இடத்தில், தன் மாணவர்களுடன் சென்று தங்கி காலத்தை வீண் போக்காது வேலைசெய்துவந்தார். கோடையைக் கழிக்கப் பல இடங்களைக் கருதினர்; இவர் பார்த்த இடங்களிற் சில நச்சுக் காற்றும் நீரும் உடையனவாகத் தோன்றினமையில், கொடைக்கானலைக் குடியிருப்பாகக் கொள்ளும் காலம்வரையில் வெம்மையினின்று விடுதிபெற வியலவில்லை. சாரற் காலங்களில் குற்றாலம் இவரைக் குளிர்வித்தது.

உலகத்தின் பழ இலக்கியங்களாகிய எபிரேயம், கிரேக்கம் இரண்டினும் காணப்பெறும் பல செய்திகள், தமிழகத்தோடு தொடர்புடையனவாக இவருக்குத் தோன்றின. உவரிக்கரையைப் பார்த்தவுடனே, எபிரேய இலக்கியத்தில் பழமையாகக் காணப்பெறும் ஒபர் (Ophir) இவருடைய நினைவுக்கு வந்தது. எபிரேயம், அராபியம் முதலிய செமிதேய மொழிகளில் சிறந்த அறிஞராயும், ஐரோப்பிய இலக்கிய வுலகில் புகழ் பெற்றவராயும் விளங்கிய ரெனன் (Ernest Renan) என்னும் பிரஞ்சு நாட்டுப் பெரியார் 'பலர் எண்ணுகிறபடி ஒபர் என்பது ஆப்பிரிக்காவிலுள்ளதல்ல, இந்தியாவின் மேற்கரையிலுள்ளதே என்பது என் துணிவு' எனப் பேசியுள்ளதையும் எண்ணித் தொடர்பு படுத்தினர். தமிழகத்தின் தெற்குக் கோடியில், கோட்டாறு, குமரித்துறை, பண்டைய கொற்கையிருந்த இடம், முதலியவற்றுள், ஒருவகைப் பெரிய மரங்களைக் கண்டார்; அவை ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவை என்பதையும், நீண்டகாலம் இருக்கக் கூடியவை என்பதையும் உணர்ந்திருந்தமையாலும், அம்மர வகையின் பெயர்கூட இந்தியாவில் வழங்கப் பெருமையாலும், பண்டை நாட்களில் தமிழகத்தோடு வாணிகம்செய்த அயல்நாட்டார் கொணர்ந்து தாங்கள் தங்கிய இடங்களில் பயிர் செய்ததாக இருக்கலாம் என்று துணிவுகொண்டார்; அவ்வாறு கொணர்ந்தோர், கிரேக்கரோ, பொனேசியரோ, அல்லது விவிலிய நூலின் பழம்பகுதியில் புகழ் பெற்ற சாலமன் மன்னனின் தூதர்கள்தானே என்று ஐயுற்று, பண்டைய தமிழகத்தை மனக்கண்ணில் கண்டுகளித்தார். எபிரேய மொழியில் மயிலுக்கு வழங்கப்பெறும் 'துகி' என்னும் சொல் தமிழ் மொழியின் 'தோகை'யே என்பதைக் கண்டார். 'அரிசி' 'இஞ்சிவேர்' முதலிய சொற்கள் மேல்நாட்டு பண்டைய மொழிகளில் பயின்றுள்ள பாங்கையும் அறிந்தார். மலையாளக் கரையில் கிடைத்தனவும், திருவாங்கூர் மன்னரால் தொகுத்துவைத்திருந்தனவுமான பழங்காசுகளையும் சின்னங்களையும் பார்த்து ஆய்ந்து, அவை, ரோம் சக்ரவர்த்தி அகஸ்ட்டஸ் காலத்திலிருந்து நீரோ ஆட்சி வரையிலுள்ளன என்பதை விளக்கமாகக் கண்டு 1851-ஆம் ஆண்டு ஒரு சிறு நூல்

எழுதி, திருவாங்கூர் மன்னர் மூலமாக வெளியிட்டார். இவை யெல்லாம், மேலும் மேலும் பண்டைய தமிழகத்தின் உயரிய நிலையை அவர் உள்ளத்தில் பதிவித்தன. சமயத் தொண்டிலேயே பெரும் பொழுதையும் கழிக்கவேண்டிய கடமையுடையவரானமையால், இவற்றை எல்லாம் தொகுத்து வெளியிடற்கேற்ற ஓய்வு கிடைக்க வில்லை; தான் கண்டவை, கற்றவை, கேட்டவைகளை எல்லாம் முறை யாகக் குறித்துச் சேர்த்துவைத்தார். மேலும், அக்காலத்தில், இந்தியாவைப்பற்றிய பழஞ் செய்திகளைத் தெரிந்துகொள்ளுவதற் கான நூல்களும் வெளியீடுகளும், ஜர்மன் மொழியில் அதிகமாக இருந்தபடியால், அந்தமொழியை நன்கு கற்று, அதிலுள்ள நூல் களை எல்லாம் வாங்கி,தெளிவாகப் பயின்று குறிப்பெடுத்துவைத்தார். மொழியியல், இனவியல், வரலாறு, இவைகளில் மிகவும் ஈடுபட்டு அப்பகுதி நூல்களை இடைவிடாது பயின்றார். மொழியியல், வரலாறு முதலியவைகளைப் பொருளாகக்கொண்டு எழுதும் நூல்களிலும் கட்டுரைகளிலும், நேர்மை, தெளிவு, வரையறை முதலிய தகுதி ஒரு சிறிதும் குறையக்கூடாதென்பதும், இத்தகுதி பெறுவதற்கு, பரந்த பயிற்சியும், தெளிந்த நோக்கமும், உண்மையில் ஊக்கமும், இவை களுக்கெல்லாம் மேலாக, மாசில்லாத அன்பும் இன்றியமையாதன என்பதும் இவருடைய கொள்கை. அறிவும் ஆற்றலும் உடையார் செய்யும் ஆராய்ச்சி அன்பு இல்லாத இடத்து உண்மை காண இயலாது ஒழிவதும், அன்பு ஒன்றே உடையார் ஆராய்ச்சி அறிவும் ஆற்றலும் இல்லாத இடத்து நகைக்கு இடமாதலும், நாம் என்றும் காணும் உண்மைகளல்லவா ?

இடையன் குடியில் பணியேற்ற முதல் நாளிலிருந்தே அவ்வூர்க் கோயிலை அழகுபெற அமைக்கவேண்டும் என்ற எண்ணம், கால்டு வெல் உள்ளத்தில் வளர்வதாயிற்று; பலவாறு முயன்று, 1847-ஆம் ஆண்டில், தான் எண்ணிய கோயிலுக்குக் கால் நாட்டினார்; பின்னர், இந்தக் கோயிலைச் சிறப்புறக் கட்டவேண்டிய முயற்சியிலேயே பெரிதும் ஈடுபட வேண்டியதாயிற்று. இதற்கான அமைப்புகள் ஒவ்வொன்றையும் தானே வரைந்தும், தொழிலாளர்களுக்கு நேர் நின்று காட்டியும் இடைவிடாது வேலை செய்தார். இவர் வேண்டு கோளுக்கு இயைந்து, இலந்தனிலுள்ள ஒரு 'கட்டிடக் கழகத்தார்'. கோயில் அமைப்பதற்கான படம் ஒன்று, எல்லா விளக்கப் படங்க ளுடனும் அனுப்பிவைத்தார்கள்; அக்கழகத்தாருள் ஒருவரேனும் இவருக்கு அறிமுகமுடையவர்களல்லர்; எனினும், இவர் கடிதம் பெற்ற மறு அஞ்சலிலேயே கோயிலமைப்புக்கான படங்களை அனுப்பிவைத்தது, இவருடைய உள்ளத்தை உருக்கியது; 'இதுவன்றோ ஆங்கிலேயர் பேருள்ளம்' என வியந்து பாராட்டினார்.

அந்தப் படங்களை வரைவதற்கு அக்காலத்தில் ஐம்பது பவுனுக்கு மேலாகும் எனக் கருதினர்.

இடைவிடாத உழைப்பும், பதினாறு ஆண்டுகளாக வெப்ப மிகுந்த நாட்டில் தங்கியதும், இவருடைய உடல் நலத்தை நலிவித்தன. உடல் நலத்தைக் கருதியும், சமய சங்க வேலைகளைக் கருதியும், 1854-ஆம் ஆண்டு, ஆங்கில நாட்டுக்குச் சென்று மூன்று ஆண்டுகள் தங்கவேண்டியதாயிற்று. குளிர்ந்த, தன் தாய் நாட்டுக்குச் சென்றவுடனேயே, தான் இதுவரை குறித்துவைத்திருந்த தென் இந்திய மொழிகள், வரலாறு முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்களை எல்லாம் தொடர்புபடுத்தி ஒரு நூலாக எழுதத் தொடங்கினர். ஓய்வு கிடைக்கும் என்று எண்ணிச் சென்ற தாய்நாட்டிலும் சமயப் பணிகள் இவரைச் சூழ்ந்துகொண்டன, எனினும் அந்த வேலைகளுக்கு இடையே இவ்வேலையையும் விடாது செய்வதற்கு அந்நாட்டின் குளிர்ச்சி இவருக்கு இடங்கொடுத்தது. இந்நூலைத் தொடங்கி ஓராண்டு பத்து திங்களில் முற்றுவித்து, 1856-ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் நாள், இலந்தன் நகரத்தில், இதன் முகவுரையையுங் கையெழுத்திட்டு வெளியிட்டார்.

இதன் முன்னுரையைக் கண்ட அறிஞருலகம், தமிழ் நாட்டின் பழமையையும் பெருமையையும் தெரிந்து கொண்டது. இந்திய வரலாற்றில் இருண்டிருந்த ஒரு மூலையில், இதன் ஒளிவீசிப் பல உண்மைகளை விளக்கியதோடு, இன்னும் ஆராய்ந்து காணவேண்டியன பலவுள என்பதையும் அறிவுறுத்தியது. 'திராவிட, அல்லது தென் இந்தியக் கொத்து, மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்' (A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages) என்ற தலைப்புப் பெயரில், இந்நூலை வெளியிட்டார். நூலுட் செறிந்துள்ள பல உண்மைகளும், அவைகளை ஆயும் முறைகளும், கண்டவற்றை வகைப்படுத்திய நெறியும், மொழிநூல் உலகத்துக்கே ஒரு விருந்தாய்த்திகழ்தன.

தென் இந்திய மொழிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதும், சமஸ்கிருதத்தினின்று தோன்றியவையல்ல வென்பதும், இவை ஆரிய மொழிக்கூட்டத்தைச் சேர்ந்தனவல்ல வென்பதும், தென்மொழிச் சொற்கள் வடமொழிகளில் பல கலந்துள்ளன வென்பதுமான எண்ணங்கள் இவரிடம் தோன்றியபோது, இவ்வெண்ணங்கள் இவரிடமே முதன் முதலாகத் தோன்றியனவென்று எண்ணினர். பின்னர் இவ்வெண்ணங்களை ஆராய்ந்து சான்றுகளைக்கண்டு முறைப்படுத்தும்போது, தான் பிறப்பதற்கு முன்னரே, இத்தகைய தோற்றம் சில சிறந்த மொழிநூலறிஞர்களுக்கு

உண்டாகியிருந்ததை அறிந்தார். ஐரோப்பாவில், பாப் (Eranz Bopp - 1791-1867) என்னும் மொழிநூல் முதல்வர்களில் ஒருவர் ஒப்பியல் இலக்கண முறைகளை வகுத்துக் கொண்டிருக்கும்போது, சென்னையில், எல்லீசு, தென்மொழி ஒப்பியற் பண்புகளை வகுத்துத் தமிழ் முதலிய தென் மொழிகள் ஆரியத்தில் வேருனவை எனக் கண்டிருந்தார்; இவர் கருத்துக்களுட் சில 1816-ஆம் ஆண்டு வெளி வந்த காமல் தெலுங்கு மொழி இலக்கண நூலின் முன்னுரையில் குறிக்கப் பெற்றிருந்தன. மொழிநூல் முதல்வர்களுள் ஒருவரும், மற்றொரு முதல்வராகிய, ஜப்பானியப் பேரறிஞர், கிரிம் (Jacob Grimm 1785 - 1863) என்பவருடன் கூடி பல ஆராய்ச்சிகள் செய்தவரும், பழஞ்சுவடிகளைத் தேடி 1819-ஆம் ஆண்டிலிருந்து 1822-ஆம் ஆண்டுவரை, பம்பாய் முதல் கொழும்புவரை சுற்றிக் கொண்டிருந்தவருமான இராஸ்க் (Rasmus Kristian Rask 1787-1832)என்னும் மொழிநூல் முதல்வர், 'திராவிட மொழிகள்' இந்தே யீரோப்பிய மொழிகளோடு சேர்க்கப்படக் கூடியனவல்ல, சிதேய மொழிக் கூட்டத்தில், அதிலும் பின்னிஸ் அல்லது அக்ரீயன் (Finnish or Ugrian) தொகுப்புக்கு நெருக்கமாகச் சேர்க்கப்பெற வேண்டியன' எனக் குறிப்பிட்டிருந்தார். இவர் தேடித் தொகுத்த சுவடிகளெல்லாம் கோபன்ஹேகன் நூல்நிலையங்களிலிருக்கின்றன; துருவிப்பார்த்தால் அரிய தமிழ்ச் சுவடிகளும் காணக்கூடும். பம்பாயிலிருந்த ஸ்டீவன்ஸன் (Rev Dr. Stevenson) என்பவர், வடநாட்டில் வழங்கும் மொழிகளில், ஆரிய மொழிப் பண்புகளோடு ஒட்டாத மொழிப் பண்புகளும், ஆரியத் தொடர்பற்ற சொற்களும் தென்னாட்டு மொழிகளில் தொடர்புடையனவே எனக் காட்டி சில கட்டுரைகள், பம்பாய் ஆகியச் சங்க வெளியீடுகளில் எழுதியிருந் தார். இவைகளைப் பார்க்கும்போது, இத்தோற்றங்கள் தனக்குத் தான் முதல் முதல் தோன்றியனவென்ற எண்ணம் கால்டுவெலுக்குக் குறைந்தது எனினும், இத்தோற்றங்களை உருப்படுத்தி அறிவுலகம் ஐயமறக் கொள்ளும்படிச் செய்தது இவருடைய எழுத்துக்களே என்பதை அறிந்தார்; ஏனையோரும் அவ்வாறே ஒப்புக்கொண்டு மகிழ்ந்தார்கள். பிற்காலத்தில். நாளதுவரையில், இவருடைய 'ஒப்பியல் இலக்கணமே,' திராவிட மொழித் தொகுதிக்கு ஒரு தனி நூலாக, உலகத்தில், ஆங்கில மொழியில் விளங்கிவருகின்றது. இதன் வரைமுறைகளை மாக்ஸ்மூலர் (Max Muller) முதலிய மொழி நூலறிஞர்கள் வியந்தார்கள்; தங்கள் நூல்களில் ஆதரவாகவும் காட்டினார்கள். ஐரோப்பிய மொழிநூற் புலவர்களுள் சிலர் திராவிட மொழிவரையில் இவர் கூறியுள்ளவற்றை மிகவும் வியந்து போற்றி னார்களெனினும், இம்மொழிக் கொத்துக்கு ஒரு மொழிக் கிளையை நாடிய முயற்சி அவ்வளவு பயனுடையதல்லவெனவும், அதற்காக இவர் இவ்வளவு பாடுபடவேண்டியதில்லையென்றும் கருதினார்கள்.

எவர் எவ்வாறு கூறினும், திராவிட மொழிக்கு இவர் நூலே வேத மாக நாளதுவரை நிற்கின்றமையின், இவரே, திராவிட மொழித் துறைக்குத் தலைவரும் வழிகாட்டியும் என்பதில் ஐயமில்லை. இந்த, அரிய ஆராய்ச்சியின் பயனாகத் தோன்றிய, ஒப்பியல் இலக்கணத்தை வியந்து, இவர், இளமையில் பயின்ற கிளாஸ்கோப் பல்கலைக் கழகத்தார் இவருக்குப் பேரறிஞர் (L. L. D.) என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர்.

இந்நூல் வெளிவந்த காலத்தில், தமிழ் இலக்கணத்துறையில் வேலை செய்துள்ள, வேறு சில அறிஞர்களையும் ஒரு சிறிது கருது வோம். 1856-ஆம் ஆண்டில், ஜெர்மனியில், கிரால் (Dr. Graul) என்னும் அறிஞர், 'தமிழ் மொழி இலக்கணம்' ஒன்று ஆங்கிலத்தி லும் ஜெர்மன் மொழியிலும் வெளியிட்டார். இவர் செய்த ஒரு வரையறையால், தமிழ் மொழியைக் கற்கும் அயலார்க்கும் ஒரு நன்மை உண்டாயிற்று. இலக்கண வரம்பு நன்கு கட்டப்பெற்ற இம்மொழியில் வினைப் பகுதிகள், முக்காலங்களைக் காட்டும்போது, அவை பெறும் காலக்குறிகளையும் மாறுபாடுகளையும் அடிப்படை யாகக் கொண்டு அவற்றை வரையறைசெய்து வகைப்படுத்தப்பெரு மலிருந்தது. இம்மொழியைக் கற்கும் அயலாருக்கு ஒரு குறையாகத் தோன்றிற்று. நம் இலக்கண ஆசிரியர்களோ, இந்த இடர்ப்பாட்டை உணர்ந்தார்களேனும், விளக்கி வகைசெய்ய முயலாமல் 'கா, சா. தா இவை முறையே காத்தான். செத்தான், தந்தான் எனவும். கல், நில், புல், சொல் இவை கற்ருன், நின்ருன், புல்லினுன், சொன் ஞன் எனவும் ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுத லால், அவையெல்லாந் தனித்தனி சொல்லப்புகின் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங்கொண்டு அமைத்துக் கொள்க' எனக் கட்டளையிட்டுப் போயினர், ஆனல், வினைப்பகுதிகள் அடை யும் மாறுபாடுகள் அயலாரை மிகவும் இடர்ப்படுத்தின; 'தொழு' என்பது 'தொழுதான்' என மாறுவதைத் தெரிந்த அயல் மாணவர், 'விழு' என்பதை 'விழுதான்' என்றும். 'ஆள்' ஆண்டான் ஆனல் 'கேள்' கேண்டானகும் என்றும், 'கொடு' கொடுத்தான், 'சுடு' சுடுத்தான் என்றும் எண்ணி இடர்ப்பட்டனர்; இக்குறையை நீக்க, வீரமாமுனிவர் முயன்ருர். ஆனல், கிரால்தான், தன் இலக்கணத் தில் இந்த வினைப் பகுதிகளை எல்லாம், அவை முக்காலங்களைக் காட்டுவதற்குப் பெறும் குறிகளைக்கொண்டும், அக்குறிகளைப் பெறும் போது அடையும் வேறுபாடுகளைப் பார்த்தும், (சமஸ்கிருதம், இலத் தீன் முதலிய மொழிகளில் பிரித்துள்ளதுபோல்) பன்னிரு கணங்க ளாகப் பிரித்து, 1. செய்—, 2. ஆள்—, 3. கொல்—, 4. அறி—, 5. ஆக்கு—, 6. நடு—, 7. உண்—. 8. தின்—, 9. கேள்—,

10. கல்—, 11. தீர்—, 12. நட—, என்ற வாய்ப்பாடுகளில் அமைத்தார். இம்முறையையே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியிலும், அதன் முதல் பதிப்பாசிரியர் சாந்தலர் பின்பற்றி, இப்பன்னிரு கணத்துள்ளும் அடக்க வியலாத வினைப் பகுதிகளாகிய, த—, சா—, காண்—, போன்றவற்றை பதின்மூன்ருவது கணமாக அமைத்தார். சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்ருண்டின் தொடக்கத்திலும், வினைப் பகுதிகளைக் கணங்களாகப் பிரித்துப் பயிற்றுவிக்கும் இலக்கண முறை, சில ஆங்கிலப் பள்ளிகளிலிருந்ததேனும், தமிழைத் தாய்மொழியாகவுடையவர்களுக்கு இம்முறை வேண்டப்பெறுவதில்லையென விட்டுவிட்டார்கள். எவ்வாருயினும், ஒரு மொழியின் இலக்கணத்துக்கு இம்முறை வேண்டப்பெறுவதுதான் என்பதை உணர்ந்த தமிழ்ப் பேராசிரியர் இராவ்சாகேப். மு. இராகவையங்காரவர்கள், இவ்வினை விகற்ப முறையை, தமிழ் இலக்கண மரபுக்கேற்ப சூத்திரங்களாகச் செய்து விளக்கவுரையும் எழுதியுள்ளார்கள். விரைவில் வெளிவரக்கூடும் பேராசிரியர், தி. பொ மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுடைய மேற்பார்வையில், அவர்களுடைய ஆராய்ச்சி மாணவர் ஒருவர் தமிழிலுள்ள வினைப் பகுதிகளையெல்லாம் இந்தப் பிரிவின்படி அட்டவணை செய்துவைத்திருக்கின்ருர். இனி, தமிழ் இலக்கணத்திற்கு அயலார் கூறும் இக்குறை குறைவதாகும், இந்த, கிரால், தமிழைப்பற்றி பல அரிய கட்டுரைகள் ஜர்மன் மொழியில் எழுதியுள்ளார்; திருக்குறளையும் ஜர்மனில் மொழிபெயர்த்துள்ளார். இவர் நூலெல்லாம் நூருண்டுகளுக்கு முன் வெளிவந்தவை

1885-ஆம் ஆண்டில் தஞ்சையிலிருந்து, போப்பையர், ஆங்கிலம் அறிந்தார் பயிலுவதற்குத்துணையாக ஒரு கைச்சுவடி வெளியிட்டார்; அது பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளது; இன்றும், அதுதான் அத்துறையில் சிறந்து விளங்குகின்றது; பின்னர், 1857-ஆம் ஆண்டில் ஒரு தமிழ் இலக்கணநூல் வெளியிட்டார். அதில், முதலில் எளிமையாக இலக்கண விதிகளை வினுவிடையாகவும், பின்னர், நன்னூலை உரையுடனும், யாப்பெருங்கலம் மூலமும், இலக்கண அகராதியும், ஆங்கிலக் குறிப்புக்களும் சேர்த்து, அழகிய முறையில் அச்சிட்டும் கொடுத்திருந்தார். இந்த இலக்கண நூலை, அப்போதுதான் தொடங்கிய சென்னைப் பல்கலைக்கழக முதல் தலைவர். ஹாரிஸ் பெருமகனுக்கு (Lord Harris) உரிமை செய்து. * "பெருமகனுகிய தாங்கள் தலைமைதாங்கும் பல்கலைக் கழகத்தில் பயிலவிருப்போரில் பெரும்பாலர் (தமிழர்) அவர்கள் தாய்மொழியை – இனிமையில், குழைவில். நிறைவில், ஆற்றலில் எதற்கும் குறைவுபடாததொரு மொழி—நிறைதவிராது அறிவியல் முறையில் பயில்வது, ஏனைய உலகநூற் பயிற்சியோடு ஒத்த பயன்தருவதோடு, அப்பயிற்சி,

(தொடரும்)